**கோயம்புத்தூர் மாநகராட்சி**

**திடக்கழிவு மேலாண்மை 2010, துணை விதிகள்**

**(வரைவு)**

பிரிவு 3, 6 மற்றும் சுற்றுசூழல் (பாதுகாப்பு) சட்டம் 1986 ( 1986ன் 29) 25 கீழ் வழ§கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, மத்திய அரசு நகராட்சி திடக் கழிவுகளைக் கையாளுதலையும் மேலாண்மையையும் ஒழு§குபடுத்துவதன் பொருட்டு, மாநகர திடக்கழிவுகள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள் 2000 இயற்றியுள்ளது. இந்த மாநகர திடக் கழிவுகள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள் 2000 தம் பொறுப்புப் பகுதிகளில் இந்த விதிகளின் பிரிவுகளைச் செயல்படுத்த இருக்கும், மற்றும் திடக்கழிவுகளைத் தொகுக்க, சேமிக்க, பிரிக்க, போக்குவரத்து செய்ய, நொதித்தல் செய்ய அப்புறப்படுத்த உள்கட்டமைப்பு வசதி ஏற்படுத்தும் அனைத்து நகராட்சி ஆணைக் குழுக்களுக்கும் பொருந்தும். மாநகரத் திடக் கழிவுகள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள் 2000ல் அறிவிக்கப்பட்டுள்ள குப்பைச் சேகரிப்பு மற்றும் பிரித்தல் அமைப்புக்கு ஏற்ப குப்பை சேர்வதைத் தவிர்க்கவும். குப்பைகளைப் பிரிக்கப்பட்ட நிலையில் உருவாக்கவும் தொடர்புடைய மாநகர ஆணைக்குழுக்கு ஒத்துழைப்பு கொடுத்துச் செயல்பட வேண்டியது கழிவுகள் ஏற்படுத்துவோரின் பொறுப்பாகும்.

கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் XXX/1981) ஏற்ப பிரிவுகள் 119, 120, 226, 227, 228, 229, 230, 231, 232, 233, 234, 235, 265, 430, 431, 432, 433, 434, 435, 436, 438, 439, 440 மற்றும் அதன் பின் வந்துள்ள அடுத்தடுத்த திருத்த§களை உள்ளடக்கிய துணை பிரிவுகளின்படி கோயம்புத்தூர் நகரில் பயனுள்ள வகையில் திடக்கழிவு மேலாண்மையை உறுதிப்படுத்துவதற்காக மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மை துணைவிதிகள், 2010 இயற்றப்பட்டுள்ளன.

**கோயம்புத்தூர் மாநகராட்சித் திடக்கழிவு மேலாண்மை துணைவிதிகள் தமிழ்நாடு சட்டம் 1981, 25 பிரிவு 432ன் கீழ் இயற்றப்பட்டுள்ளன**

1.0 தலைப்பு : இது கோயம்புத்தூர் மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மை துணைவிதிகள் 2010 என்று அழைக்கப்படும்.

2.0 செயல்பாடு எல்லை : இந்தத் துணைவிதிகள் கோயம்புத்தூர் நகரின் எல்லைக்கு உட்பட்ட அனைத்துப் பொது இட§களுக்கும் மற்றும் மாநகரத் திடக் கழிவுகள் ஏற்படுத்தும் அனைவருக்கும் மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சி (CCMC) எல்லைக்குள் தனியார் உரிமையில் அல்லது கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும் அனைத்து வளாக§களுக்கும் பொருந்தும்.

**3.0** வரையறை : இந்தத் துணைவிதிகளில் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணைகளில் பயன்படுத்தப்பட்டுள்ள வரையறை செய்யப்படாத சொற்கள் மற்றும் அவை உணர்த்தும் பொருள் வெளிப்பாடுகள், சூழல் மாற்றாகக் கொள்ள தேவை இல்லை என்றால், முறையே கோயம்புத்தூர் மாநகராட்சி சட்ட (தமிழ்நாடு சட்டம் XXV/1981) த்தில் கொடுக்கப்பட்டுள்ளவாறு இருக்கும் கீழ்கண்ட சொற்களின் பொருள்கள் இங்குப் பின்வருமாறு வரையறுக்கப்பட்டுள்ளன.

1. முகமை : தெருவைப் பெருக்குதல், கழிவுகளை எடுத்தல், பயனர் கட்டணம் பெறுதல் போன்றவற்றிற்காக, முகமைக்கும் கோயம்புத்தூர் மாநகராட்சி (CCMC) க்கும் ஒப்பந்தம் அடிப்படையில் கடமைகளை ஆற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சி (CCMC) ஆல் அமர்த்தப்பட்ட அல்லது தனக்காகச் செயல்பட அதிகாரம் வழங்கப்பட்ட தனியாள் நிறுவனம்.

2. உதவி ஆணையாளர் : கோயம்புத்தூர் மாநகராட்சி (CCMC) சம்பந்தப்பட்ட ஊர்ப்பிரிவு (வார்டு) அலுவலகத்தின் உதவி ஆணையாளரைக் குறிக்கும்.

3. மக்கும் குப்பை : என்பதன் பொருள் நகராட்சி திடக் கழிவு (MSW) வில் பொதுவாகக் காணப்படும் குப்பை. இது ஈரமான கழிவு எனவும் அழைக்கப்படுகிறது. மக்கும் கழிவு பொதுவாகத் தாவரம் அல்லது விலங்கு ஆதாரங்களில் இருந்து உருவாகும் கழிவு ஆகும். இக்கழிவுகள் பிற வாழும் உயிரினங்களால் மக்கும் தன்மையனவாய் இருக்கும். இது காய்கறிக் கழிவுகள், உணவுக் கழிவுகள், தோட்டக் கழிவுகள், தேங்காய் ஓடுகள், மரத் துண்டுகள், நகம், முடி, முட்டை ஓடுகள், எலும்பும் சதையும் பயன்படுத்தப்பட்ட பருத்தி, காகிதம், போன்றவற்றை உள்ளடக்கியது. பிற உயிர் மக்கும் குப்பைகள் மனிதக் கழிவு, விலங்குக் கழிவு, கழிவுநீர், இறைச்சிக் கொட்டில் கழிவுகள் முதலியன.

4 உயிர் மருத்துவக் கழிவு : மனிதர் அல்லது விலங்குகள் நோய் ஆய்வு, மருத்துவம் அல்லது நோய்த்தடுப்பு, இவை தொடர்பான ஆராய்ச்சி நடவடிக்கைகள் ஆகியவற்றில் உருவாகும் கழிவுகள் அல்லது உருவாக்கப்படும்போது அல்லது உயிரியல் ஆய்வின்போது அல்லது அட்டவணை IV குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகள் உள்ளடக்கிய கழிவுப் பொருள்கள்

5 தோட்டம் மற்றும் தோட்டக்கலை பெருமளவுக் கழிவு : பூங்காக்கள், தோட்டங்கள், போக்குவரத்து வட்டங்கள் போன்றவற்றிலிருந்து உருவாகும் பெருமளவுக் கழிவுகள் ஆகும். அன்றாட கழிவுகள் எடுத்தலில் சேர்க்க இயலாத மக்கும் கழிவுகளான புற்களை வெட்டுதல், வருடாந்திர களைகள், கிளைகளைக் கழித்தல், சருகுகள், மரச்சிராய், வைக்கோல், உலர்ந்த இலைகள், ஒழுங்குபடுத்துவதால் ஏற்படும் மரக்கழிவு போன்றவற்றால் உருவாகும் கரிமம் (carbon) அதிகமாக உள்ள பழுப்பு மரப்பொருள்கள் இதில் அடங்கும்.

6 உயிரி மீத்தேனாக்கம் : உயிர்பொருள்களை நொதித்தல் சிதைவு வழி நுண்ணுயிர் நடவடிக்கைக்கு வகை செய்து மீத்தேன் அதிகமாக இருக்கும் உயிர்வாயு உருவாக்கும் செயல்முறை ஆகும்.

7 பெருமளவு கழிவுகள் தோற்றுவிக்கப்படுவர் : ஏற்படுத்துபவர் : வீட்டுச்ச_கம் / வீட்டு வளாக§கள் உணவக§கள், விடுதிகள் , சந்தைகள், தொழிற்பேட்டைகள், கடை வளாக§கள்/ விற்பனையக§கள், அரசு அல்லது பொது கட்டட§கள் அல்லது மன்றம், உடற்பயிற்சிப் போட்டிக்களம், திருமண மண்டப§கள், மனமகிழ்மன்றம்/ கேளிக்கை மன்றம் போன்றனவற்றுடன் பிற பயன்பாட்டிற்கு என்று தொடர்புடைய, உதவி ஆணையாளரால் அடையாளம் கண்டு குறிப்பிடப்பட்டுள்ள ஆதாரம்/ வளாக§கள் ஆகியவற்றின் உரிமையாளர்/ த§கி இருப்போர் அல்லது உரிமையாளர் அல்லது த§கியிருப்போரின் பிரதிநிதி.

8. சிசிஎம்சி : (CCMC) கோயம்புத்தூர் மாநகராட்சி, மாநகராட்சிச் சட்டம் 1981 (தமிழ்நாடு சட்டம் XXV/1981) கீழ் நிறுவப்பட்ட ஒரு மாநகராட்சி சட்டம் ஆகும்.

9. ஆணையாளர் : கோயம்புத்தூர் (CCMC) யின் மாநகராட்சி ஆணையாளர் கோயம்புத்தூர் மாநகராட்சி (CCMC) யின் யாருக்கு அல்லது எந்த அதிகாரிக்கு அதிகார§கள் வழ§கப்பட்டுள்ளனவோ அல்லது நகராட்சி மாநகராட்சி ஆணையாளர் கோயம்புத்தூர் மாநகராட்சி (CCMC) சட்டம் (தமிழ்நாடு சட்டம் XXX/1981) கீழ் அல்லது வேறு எந்த சட்டத்தின் கீழ் தொடர்புடைய பணிப்பேராணை வழ§கப்பட்டுள்ளனவோ அவர் என்று அ§குச் சூழல் பொருள் மாற்றம் கொள்ள வேண்டும்.

10. துய்மைப் பகுதி : எந்த வளாகத்தின் முன்னும் அல்லது சுற்றியுள்ள பகுதிகள் அல்லது வடிகால் / கால்பாதை, நடைபாதை ஓரத்தில் வரிசையாகப் பதிக்கப்பட்ட கல் (kerb) ஆகியன உள்ளிட்ட அப் (kerb) பகுதிவரை ஒட்டியுள்ளதும் ஆன பகுதிகள் தூய்மைப் பகுதி ஆகும்.

11. பெறுதல் (Collection ) : மாநகர திடக்கழிவு (MSW) குப்பைகளை நிலையான இட§களிலிருந்து அல்லது மற்ற இட§களிலிருந்து, எடுத்தலும் அகற்றுதலும் ஆகும்.

12. உருவாகும் இடத்தில் பெறுதல் (Collection at source) : வளாக§களுக்குள் இருக்கும் எந்தக் கட்டடத்திலிருந்தும் அல்லது குழுவாக இருக்கும் கட்டட§fë‹ bghJ Ïl¤ÂèUªJ« neçilahf MSW khefuh£Á ÂI¡fêÎ F¥igfis bgWtjhF«. ÏJ ÅLfŸ njhW« mšyJ thršfŸ njhW« br‹W bgWjš v‹W« F¿¥ÃI¥gL«.

13. சமுதாயக் (Community) குப்பைத் தொட்டி : கோயம்புத்தூர் மாநகராட்சியால் (CCMC) ஆல் நிறுவப்பட்டும் பராமரிக்கப்பட்டும் வரும் குப்பைத் தொட்டி அல்லது உரிமையாளர்கள் மற்றும்/ அல்லது குடியிருப்போர் கூட்டாக ஒன்று அல்லது பல வளாக§கள் சேர்ந்து குப்பைகளை தரம் பிரிக்கவும் வசதி

கொண்ட வகையில் எதாவது ஒரு வளாகத்தின் சாலையோரத்தில் அல்லது அவர்களுக்குரிய பொது இடத்தில் அமைக்கப்பட்ட குப்பைத் தொட்டி ஆகும்.

14. உரமாக்கல் (Composting) : உயிர்மப் பொருளை நுண்ணுயிர் சிதைவுக்கு உட்படுத்திச் செய்யும் ஒரு கட்டுப்படுத்தப்பட்ட செயலாக்கம், இது புழுக்களைப் பயன்படுத்தி மக்கச் செய்வதையும் உள்ளடக்கியது. அதாவது மண்புழுக்களைப் பயன்படுத்தி உயிர் மக்கும் கழிவுகளை மக்கிய உரமாக மாற்றும் ஒரு செயலாக்கமாகும்.

15. கட்டுமானம் மற்றும் கட்டிட உடைபாடு பொருட்கள் (C&D) : பழுது பார்த்தல், கட்டுமானம், மீளக்கட்டுதல் செயல்பாடுகளால் உருவாகும் கழிவுகளோடு கட்டுமானத்திலும் கட்டிட இடிபாடுகளில் ஏற்படும் இடர் தரத் தக்கதல்லாத இயல்புள்ள கழிவுகளாகும்.

16. கொள்கலத்துடன் கூடிய கைவண்டி : மாநகராட்சி திடக்கழிவை (MSW) ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்திற்குக் கொண்டு செல்ல கோயம்புத்தூர் மாநகராட்சி (CCMC) ஆல் அல்லது CCMC அமர்த்திய முகமை/ முகவரால் கொடுக்கப்பட்ட கைவண்டியாகும்.

17. ஒப்படைப்பு (Delivery) : கோயம்புத்தூர் மாநகராட்சி திடக்கழிவு (MSW) ன் எவ்வகையான குப்பைகளையும் CCMC ஆல் நியமிக்கப்பட்ட / அ§கீகரிக்கப்பட்ட அல்லது உரிமம் வழ§கப்பட்ட CCMC கோயம்புத்தூர் மாநகராட்சி துப்புரவு பணியாள் எடுத்துச் செல்ல மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சியால் CCMC வழ§கிய ஏதாவது வாகன§களில் ஏற்ற அல்லது வேறு அ§கீகரிக்கப்பட்ட முகமைகள் அல்லது அவ்வாறு செய்ய கோயம்புத்தூர் மாநகராட்சி (CCMC) உரிமம் வழ§கப்பட்டவருக்கு ஒப்படைத்தலாகும்.

18. மின்கழிவு (e-waste) : தனிநபர் கணினிகள், தொலைபேசிகள், எம்பி3 ஒலி மற்றும் ஒளி (இசை) இயக்கும் கருவி, தொலைக்காட்சிப் பெட்டிகள், கால்குலேட்டர்கள், ஜிபிஎஸ் (GPS) தானிய§கி மின்னணுக் கருவிகள், டிஜிட்டல் புகைப்படப் பெட்டிகள் ஆகியவற்றுடன் காணொலி ஊடகமாகப் பயன்படும் டிவிடி, விசிஆர் அல்லது கேம்கோடர்கள் போன்ற ஒலி மற்றும் ஒளி (இசை) இயக்கும் பதிவு செய்யும் கருவிகளின் கழிவுகள்.

19. பழக்கப்படுதல்/ எச்சரிக்கைக் காலம் : விதிகளை மீறுவதற்குச் செலுத்த வேண்டிய தண்டத் தொகையில் தளர்வுள்ள அட்டவணை –1ல் வழ§கப்பட்டுள்ள குறிப்பிட்ட காலம்.

20. கழிவுகளை உருவாக்குபவர் : யார் கோயம்புத்தூர் மாநகராட்சி (CCMC) எல்லைக்குள் குப்பைகளை உருவாக்குகிறாரோ அவரைக் குறிப்பிடுகிறது.

**21.** அபாயகரமான வீட்டுக் கழிவுகள் (HHW) : பொதுவான வீட்டு வேதியல் பொருள்கள் மற்றும் உரிமையாளர்க்கு இனி பயன்படாத கழிவு பொருள்கள் ஆகியவை உள்ளிட்ட அபாயகரமான கழிவுகள், எதிர்வினைத் தன்மை, பற்றி எரியும் தன்மை, அரிக்கும தன்மை, நச்சுத்தன்மை, அழியாமல் இருக்கும் தன்மை ஆகியவற்றை உள்ளடக்கிய வரையறுக்கப்பட்ட அபாயகரமான கழிவுகள் விளைவிக்கும் ஆபத்துகள் பலவற்றைக் கொண்டுள்ள பொருள்கள் எடுத்துக்காட்டு: வடிகால் தூய்மை செய்யும் எண்ணெய்ப்பூச்சு, இயக்கி (motor) எண்ணெய், உறைதல் தடுப்பி, எரிபொருள், நஞ்சு, பூச்சிக்கொல்லிகள், களைக்கொல்லிகள், எலிக்கொல்லிகள், ஒளிரும் விளக்குகள், விளக்கின் அடிப்பகுதி, புகை கண்டறியும் கருவி, மருத்துவக் கழிவுகள், தூய்மை செய்யும் சிலவகை வேதிப்பொருள்கள், மின்கல§கள், காலணி மெருகு, ஒப்பனைப் பொருள் முதலியன.

**22.** அபாயகரமான கழிவு : கழிவுகள், இயற்பியல், வேதியல், எதிர்ச்செயல்பாடு, நச்சு, காரணத்தால் ஆபத்துத் தருவது அல்லது உடல்நலத்திற்கு அல்லது சுற்றுச்சூழலுக்கு ஆபத்துத் தரத்தக்கதாக இருக்கக்கூடியது. தனியாக அல்லது வேறொரு கழிவுகளோடு, அல்லது பொருள்களோடு சேரும்போது ஆபத்து ஏற்படுத்தும் வாய்ப்பு உள்ளது. குறிப்பாக அட்டவணை-III ல் குறிப்பிட்டுள்ளபடி, இந்தத் துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளதும் பிற அபாயகரமான கழிவும் அபாயகரமான கழிவுகள் என வரையறுக்கப்பட்டுள்ளன. (மேலாண்மை மற்றும் கையாளுதல்) சட்ட§கள் 1989, (இன்று வரை திருத்தம் செய்யப்பட்டுள்ளது).

**23.** வீட்டு ஜலதாரை : சாக்கடை நீர் செல்வதற்காக ஒதுக்கப்பட்ட வழி அல்லது அதற்காக விடப்பட்ட சிறு நிலம் அல்லது சாக்கடை செல்லும் நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படுவது அல்லது மலம், _த்திரம் சாக்கடைக் குழிக்கு எளிமையாக செல்லக்கூடியது அல்லது நிரப்புவதற்கான பிற கொள்கலன் அல்லது பிற மாசுப் பொருள்கள் அதை அகற்ற ஆட்களை அமர்த்துவது அல்லது அ§கிருந்து இவ்வகைப் பொருள்களை அப்புறப்படுத்துவது.

**24.** மந்தப் பொருள் (inerts) : திடக்கழிவு அல்லது செயலாக்கத்திற்குப் பின்பு இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல் பண்புகளால் தூய்மையின் பொருட்டு பள்ளம் நிரப்புதல் (land filling) க்குத் தகுதியாக இருக்கும் திடக் கழிவிலிருந்து எஞ்சுபவை.

**25.** சிதறி கிடக்கும் குப்பை : தேவை இல்லை என எறிவதற்கும் ஒரு§கு சேர்ப்பதற்கும் இந்தத் துணைவிதிகளால் தடை உள்ள அனைத்துப் பொருள்கள் அல்லது அசுத்தம் ஏற்படுத்தும் அல்லது ஆபத்து விளைவிக்கும் அல்லது பொதுநலக் காப்பிற்கும், நலத்திற்கும் தொல்லையாய் விளங்கும் பொருள்கள்.

**26.** குப்பை கொட்டுதல் : குப்பை கொட்டுதல் என்பது குப்பை அது விழுந்து, இறங்கி, காற்றில் பறந்து, அடித்துச்சென்று, கசிந்து அல்லது விலகி ஓடும் அல்லது அது விழுந்து, இறங்கி, காற்றில் அடித்துச்சென்று, கசிந்து அல்லது விலகி ஓடக்கூடிய வாய்ப்புள்ளதாக இருக்கும் அல்லது, இல்லையெனில் விலகி ஓடி பொது இடத்திற்குள் அல்லது பொது இடத்தின்மேல் விழுந்து அல்லது பொது இடத்திற்குள் அல்லது பொது இடத்தின்மேல் விழக் காரணமாக இருந்து, அல்லது அனுமதிப்பதாக இல்லாத இடத்தில் கொட்டுவதாகும்.

**27.** அ) நகராட்சி திடக்கழிவு என்பது MSW –ன் பொருள். இது நகர திடக்கழிவு என்றும் அழைக்கப்படுகிறது. இது பெருமபகுதி வீட்டுக்கழிவாகவும் சில நேரங்களில் அதனுடன் நகராட்சியால் குறிப்பிட்ட பகுதியில் பெறப்பட்ட வணிகக் கழிவுடன் கூடி இருக்கும். இது அகாயகரமான தொழிற்சாலைக் கழிவு சேராதது. இது திடக்கழிவாகவும் அரைப்பகுதி திடக்கழிவாகவும் இருக்கும்.

ஆ) கழிவுநீர் வீட்டு அடுக்களைக் கழிவு நீர்த்தொட்டி, தூம்புத்தாரை, குளியலறை ஆகியவற்றிலிருந்து வரும் கழிவு நீர். ஆனால் கழிப்பறையிலிருந்து வரும் கழிவு நீர்மம் அல்லது மலம் இதில் சேராது.

**28.** மக்காத உயிரிக் கழிவு : வாழும் பிற உயிரினங்களால் பிரிக்க இயலாக கழிவுகள் என்பத இதன் பொருள்.

**29.** அணிமை இடம் : இயற்கை அமைப்பு மனைத்திட்டம், அதன் நிலை, அங்கு இருப்போர் என்பவற்றுடன் தெளிவாக வரையறுக்கப்பட்ட வட்டாரம் என்பது பொருள்.

**30.** புதிய கட்டுமானம் : கோயம்புத்தூர் மாநகராட்சி (CCMC) உல்லைக்குள் பொதுமக்களால் கட்டப்படும் அனைத்துக் கட்டடங்கள் என்பது பொருள்.

**31.** தொல்லை : கெடுதி, அபாயம், எரிச்சலூட்டுதல் ஏற்படுத்த காரணமாக உள்ள செயல்பாடு, விடுபாடு, இடம் அல்லது பொருள் ஆகியனவும் அல்லது பார்வை, முகர்தல், கேட்டல் ஆகியவற்றிற்கு அருவெறுப்பாக உள்ளனவும் அல்லது உயிருக்கு ஆபத்தாக உள்ளதும் அல்லது உடல் நலத்திற்கு அல்லது சொத்துக்குக் கேடாக உள்ளதும் தொல்லைத் தருவதாகும்.

**32.** தொல்லை கட்ணறிபவர் (ND) : பொதுத் தொல்லை மற்றும் இதர நடவடிக்கைகளைக் கண்டறிவதற்காக ஆணையாளரால் நியமிக்கப்பட்ட / தெரிவுசெய்யப்பட்ட ஊழியர் என்பது பொருள்.

**33.** குடியிருப்போர் / தங்கியிருப்போர் : நிலம் அல்லது கட்டடம் அல்லது அவற்றின் பகுதியை வாடகைக்குக் கொண்டு தற்காலிகமாக அல்லது பிறவகையில் தன் பயன்பாட்டில் வைத்திருப்போர்.

**34.** உரிமையாளர் : கட்டடம் அல்லது நிலம் அல்லது அவற்றின் பகுதிக்குச் சொந்தம் கொண்டாடும் உரிமையாளர்.

**35.** பொது இடம் : சாலை, முக்கியமான உயர்ந்த வளைவுச் சாலை, நதி அல்லது பள்ளத்தாக்கு முதலியவற்றை கடக்கும் இரயில் (அ) சாலை வாராவதி சந்து, நடைபாதை அல்லது வழிப்பாதை, நெடுஞ்சாலை, தரைப்பாலம், நடைவழி, குறுகிய சந்து, குறுகிய வழி, சதுர குறுகிய வழி, பொது (வழி) சாலை அல்லது பொதுவில்லா சாலை, பூங்காக்கள், தோட்டங்கள், பொழுதுபோக்கு மைதானங்கள், விளையாட்டு மைதானங்கள், கடற்கரைகள், நீர்நிலைகள், நீர் செல்லும் வழிகள் பொது பிளாஸாக்கள், உலாவும் இடம், அரசு மற்றும் நகராட்சி கட்டடங்கள், பொது மருத்துவமனைக, இறைச்சிக் கொட்டில்கள், நீதிமன்றங்கள் முதலியன.

**36.** குறிப்பிட்ட சிற்சில இடத்திலிருந்து சேகரிப்பு (Point to Point collection) என்பதன் பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி (CCMC) தெரிந்தெடுத்த குறிப்பிட்ட இடத்திலிருந்து நகராட்சி திடக்கழிவு (MSW) –ன் சேகரிப்பு அமைப்புமுறையாகும். அவ்விடம் வரை குப்பை உருவாக்குவோர் ஒருங்கு சேர்த்துச் சேமித்து வைத்ததைக் கொள்கலன் பொருத்திய கைவண்டிக்கு அல்லது கோயம்புத்தூர் மாநகராட்சி (CCMC) அமர்த்திய வாகனத்திடம் ஒப்படைத்தலுக்காகக் கொண்டு வரவேண்டும்.

**37.** வளாகக் கூட்டஙகள். ஒரு கட்டடத்தில் குடியிருப்பு மனை, வீடு, புறவீடு, கொட்டில், கொட்டகை, கொட்டாரம், குடிசை, செங்கல், சேறு, மரம், உலோகம் அல்லது பிற வேறு ஏதாவது உலோகப்பொருள் உள்ள பிற கட்டுமானத்தின் ஏதாவது அமைப்பு, ஏதாவது ஒப்பந்தத்தில் இருக்கும் திறந்த அல்லது அடைக்கப்பட்ட கட்டடம் கட்டிய அல்லது கட்டடம் இல்லாத நிலங்கள், கட்டடம் இருந்தாலும் தற்போதைக்குக் குடியிருப்பாகப் பயன்படுத்தாதவை, வாணிகம், தொழில், சேவை, வேலை அரசு அல்லது பொது நிறுவனம் அல்லது திருமணங்கள், பொருவிருந்து, கூட்டங்கள், கண்காட்சிகள், ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சிகள் போன்ற தனியார் நோக்கத்தில் செயல்படுபவை ஆகியவற்றை உள்ளடக்கியது. மேலும் வாகனம் நிறுத்துவதற்கு, தெருவிற்பனைக்கு, பணியிடத்தில பொருள்களை வைப்பதற்கு, அல்லது ஏதாவது பொது அல்லது தனியார் நோக்கத்திற்கு, சரக்கு வண்டியின் இயக்கமல்லாத பிற எதுவாக இருந்தாலும் ஆணையாளரால் தற்போதைக்கு அனுமதிக்கப்பட்ட பொதுச்சாலையின் பகுதி.

**38.** ஆள் (Person): ஆள் என்பது ஒரு தனி ஆளை அல்லது ஆள்களைக் குறிக்கும். இது கடை அல்லது நிறுவனம் அல்லது கூட்டு வாணிக நிலையம் அல்லது குழுமம் அல்லது சங்கம் அல்லது ஒருங்கிணைந்த அல்லது ஒருங்கு இணையாக தனியாள் கூட்டமும் அவர்களது முகவர்களும் ஆகியவற்றை உள்ளடக்கியது.

39. செயலாக்கம் : மறுசுழற்சி நோக்கத்திற்காக அல்லது உரம் தயாரிப்பதற்காக அல்லது பள்ளத்தில் குப்பைக்கொட்டி நிரப்புவதற்காக நகராட்சி திடக்கழிவு (MSW)ஐ இயந்திர தொழிற்கூடம் கொண்டு சென்று அறிவியல் முறைப்படி திருத்திச் செய்யும் அறிவியல் அடிப்படை செயலாக்கம்.

40. திட்டப் பொறியாளர் : கோயம்புத்தூர் மாநகராட்சி (CCMC) திடக்கழிவு மேலாண்மைத் துறை பொறுப்பில் இருக்கும் பொறியாளர்.

41. மறுசுழற்சி செய்யத்தக்க கழிவுகள் : நகராட்சி திடக்கழிவு (MSW) குப்பையில் பொதுவாகக் காணப்படும் குப்பையாகும். இது உலா கழிவு என்றும் அழைக்கப்படும் இது பலவகைக் கண்ணாடிகள், காகிதம், உலோகம், நெகிழி, ஜவுளி, மின்னணுப் பொருள்கள், போன்றவற்றை உள்ளடக்கியது.

42. அ) கொள்கலன், நகராட்சி திடக்கழிவு (ஆளுறு) வின் எவ்வகைக் குப்பையையும் சேர்த்து வைக்க பயன்படுத்தும் தொட்டி, பை போன்ற கொள்கலன்கள்.

ஆ) காளாஞ்சி : எச்சில் துப்புவதற்குப் பயன்படுத்தும் வைத்தூற்றி (Funnel) போன்ற வாய் அமைப்புடைய உலோகம் அல்லது மண் ஏனம்.

43. மறுசுழற்சி : மறுசுழற்சி செய்யத்தப்ப கழிவு என்பது பொதுவாக நகராட்சி திடக்கழிவு (MSW) குப்பையில் காணப்படுவதாகும். இது உலா கழிவு எனவும் அழைக்கப்படுகின்றது. இதை ஒரு செயல் முறையில் புதிய பொருள்கள் உருவாக்குவதற்கு வேண்டிய மூலப் பொருள்களைக் மாற்ற முடியும் புதிய அப் பொருள்கள் அசல் பொருள்கள் போல் இருக்கலாம். அவ்வாறு இல்லாமலும் இருக்கலாம்.

44. இருக்கும் வடிவத்தில் உருவாக்குவோரால் நுகர, பயன்படுத்த, செயல்முறைக்கு உற்படுத்த இயலாதது தேவையற்றது என்று விலக்கிய பொருள் ஆகும். இது பல்வேறு, செயல்பாடுகளால், செய்முறைகளால் உயிரிமைக்கும், உயிர் மக்காத வகையில் மறுசுழற்சி இயல்பு கொண்ட, திடவடிவில் அல்லது அரை–திட வடிவில் ஏற்படுபவை ஆகும்.

45. மூலர் : கழிவு உருவாகும் வளாகம் அல்லது உரிமையாளர் பயன்படுத்தும் சமூக ஒருங்கு சேர்ப்பு மையம் / தங்கி இருப்போரின் நகராட்சி திடக்கழிவு (ஆளுறு) வைப் பிரித்து ஒருங்கு சேர்ப்பதற்காக ஒன்று அல்லது அதிகமான வளாகங்கள்.

46. பிரித்தல் : நகராட்சி திடக்கழிவு (ஆளுறு) உயிரிமக்கும் குப்பை மக்காத குப்பை, அபாயகரமானது, உயிரி மருத்துவம், கட்டுமானமும் இடித்தலும், பெருமளவு தோட்டமும் தோட்டக்கலையும், காகிதம், கண்ணாடி, பிற மந்தக் கழிவு என்று குறிப்பிட்ட வகைகளாகப் பிரித்தல் ஆகும்.

47. ஒருங்கு சேர்த்தல் : MSW வை தற்காலிகமாகக் கட்டுப்படுத்துதல், குறிப்பிட்ட வகையில் குப்பைசேர்தல், வெக்டார்களால் கவர்கல், தெரு விலங்கு மற்றும் மிகுதியான துர் நாற்றம் ஆகியவற்றைத் தடுத்தல் ஆகும்.

48. நிலப்படுத்தப்பட்ட உயிரி மக்கும் கழிவு என்பது உயிரியல் அமைப்பில் நிலைப்படுத்தப்பட்ட (நோய்க்கிருமிகள் இல்லாத) கழிவு ஆகும். உயிரி மக்கும் கழிவின் இயந்திர உயிரியல் சிகிச்சை விளைவாக உருவாவது. இது இக்கழிவு நிலைப்படுத்தப்பட்ட பின்பு எவ்வகைக் கட்டுப்பாடும் இல்லாமல் பயன்படுத்த தகுதியாகும்.

49. சுகாதாரம் என்பது உடல் நலம் பேணுதலும் நோய்நிலை தடுத்தலும் உடல்நலமில்லை நிலைத் தொடர்பான சூழல் காரணிகளான பிற விளைவுகளைத் தடுத்தலும் ஆகும்.

50. துப்புரவுப் பணியாளர் : நகராட்சி திடக்கழிவு (MSW)வைப் பெறுவதற்காக அல்லது அப்புறப்படுத்துவதற்காக அல்லது கோயம்புத்தூர் மாநகராட்சி (CCMC) பகுதியிலுள்ள சாக்கடையைத் தூய்மைப்படுத்துவதற்காக (CCMC) முகமையால் பணியமர்த்தப்பட்ட பணியாளர்.

51. சுகாதார பள்ளம் நிரப்பு வசதி என்பதன் பொருள் திடக்கழிவுகள் எஞ்சும் பகுதி நிலத்தடி நீர் / மேற்பரப்பு நீர் மாசுபடுவதற்கு மற்றும் காற்று, தூசு, காற்றில் பறந்து வரும் குப்பை, துர் நாற்றம், தீயினால் ஏற்படும் இடையூறு பறவை, பூச்சி அல்லது எலி அச்சுறுத்தல், பசுமைச்சூழல் வாயு (green house gas) வெளிப்பாடு, சரிவு உறுதியற்ற தன்மை, அரிப்பு ஆகியவற்றிற்கு எதிராகப் பாதுகாப்பான வகையில் வடிவமைத்து சேர்க்கும் குப்பை கொட்டும் இடம் ஆகும்.

52. அட்டவணை என்பது இந்தத் துணைவிதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணை

53. போக்குவரத்து ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குக் குப்பையைக் கொண்டு செல்வதாகும்

54. SWM பணிக்காகப் பயனர் கட்டணம் என்பதன் பொருள் நகராட்சி திடக்கழிவை (MSW) கழிவுகளை உருவாக்கும் பலவகையினரிடமிருந்து பெறுவதற்காக, கொண்டு செல்வதற்காக, அகற்றுவதற்காக கோயம்புத்தூர் மாநகராட்சியின் (CCMC) ஆல் அவ்வப்போது அறிவிக்கப்பட்ட கட்டணம் ஆகும்.

55. வெற்றிடமனை : பயன்படுத்தாமலிருக்கும் தனியார்குழுவுக்கு / தனியாளுக்குச் சொந்தமான நிலம் அல்லது திறந்தவெளி

56. ஊர்ப்பிரிவு (வார்டு) அலுவலகம் : கோயம்புத்தூர் மாநகராட்சியின் (CCMC) உதவி ஆணையாளரால் நிர்வகிக்கப்படும் ஒரு நிர்வாக ஊர்ப்பிரிவு அலுவலகம் என்பது பொருள்.

4.0 குப்பை கொட்டுவதற்கும் தொல்லை ஏற்படுத்துவதற்கும் தடையும் தூய்மைப் பகுதிக்கு உறுதியும்

4.1 பொது இடத்தில் குப்பை கொட்டுதல் அதற்காக ஒதுக்கப்பட்ட பொது அல்லது தனியார் கொள் இடங்களைத் தவிர யாரும் பொது இடங்களில் குப்பைகளை எறியவோ கொட்டவோ கூடாது.

4.2 தனியார் சொத்தில் குப்பை கொட்துல் : கைக்கொள்ளப் பட்டிருந்தாலும் இல்லாமலிருந்தாலும் அதிகாரம் வழங்கப்பட்ட தனியார் அல்லது பொது கொள்கரத்தைத் தவிர்த்து யாரும் கைக்கொள்ளப்படாத காலி இடத்தில் குப்பையை எறியவோ கொட்டவோ கூடாது.

4.3 வாகனங்களிலிருந்து குப்பையை எறிதல் : ஓட்டுநராக இருந்தாலும் பயணியராக இருந்தாலும் யாரும், தெரு, சாலை, ஓர நடைபாதை, விளையாட்டு மைதானம், தோட்டடம், போக்குவரத்து வட்டாணம் ஆகிய இடங்களில் அல்லது பிற பொது இடங்களில் குப்பையை எறியவோ கொட்டவோ கூடாது.

4.4 குப்பை கொண்டு செல்லும் வாகனம் : ஏற்றும் சுமைகள் பறந்து அல்லது விழுந்து சாலை, ஓர நடைபாதை, போக்குவரத்து வட்டாணம், விளையாட்டு மைதானம், தோட்டம், அல்லது வேறு பொது இடம் ஆகியவற்றில் குப்பை ஏற்படுத்தாத வகையில் வாகனம் அமைத்திருக்காத திறந்த சரக்கு வண்டியை அல்லது பிறவாகனங்களை யாரும் ஓட்டவோ அல்லது இயக்கவோ கூடாது.

4.5 பொதுத் தொல்லை ஏற்படுத்துதல் : யாரும், அது அதற்கான பொது வசதியுள்ள இடத்தைத் தவிர்த்து வேறு இடங்களில் குளித்தல், துப்புதல், மூத்திரம் பெய்தல், மலம்கழித்தல், விலங்கு / பறவைக்குத் தீனி கொடுத்தல், வாகனங்களைப் பழுதுபார்த்தல் கழுவுதல், சமையல் பாத்திரங்களை அல்லது வேறு பொருள்களைக் கழுவுதல் / தூய்மைப்படுத்துதல் அல்லது எந்தப் பொது இடத்திலும் எந்த வகையான பொருள்களையும் சேமித்து வைத்தல் செய்ய கூடாது.

4.6 தூய்மைப் பகுதிக்கு உறுதி : ஒவ்வொருவரும் எந்தப் பொது இடத்திலும். ஊரிமையாளர் அல்லது தங்கியிருப்போரான யாரும், வளாகத்தின் முன்னும் அல்லது சுற்றியுள்ள பகுதியுமான நடைபாதை, திறந்த சாக்கடை / ஜலதாரா, நடைபாதை ஓரக்கல் (kerb) ஆகியன திடக்கழிவு அல்லது திரவக்கழிவு எதுவும் இல்லாமல் தூய்மையாக இருக்க உறுதிப்படுத்த வேண்டும்.

5.0 நகராட்சி திடக்கழிவு (MSW) வின் பிரித்தல், ஒருங்குசேர்ப்பு. எடுத்துச்செல்தல், பெறுதல்

கழிவுகளைக் குறிப்பிட்ட ஆறு பிரிவுகளாகப் பிரித்தல் : நகராட்சி திடக்கழிவை (MSW) உருவாக்குபவர் அனைவரும் கழிவுகளைத் தனித்தனியாகப் பிரித்து ஒருங்கு சேர்க்கவேண்டும். அல்லது கீழ்க்கண்டவாறு ஆறு வகைகளாகக் கழிவுகடிள உருவாகும் இடத்திலேயே பிரிக்க வேண்டும்.

1. உயிர் – மக்கும் (ஈரமான) கழிவு

2. அகாயகரமான வீட்டுக் கழிவு

3. மக்காத கழிவு

4. கட்டுமானத்தாலும் இடிப்பதாலும் ஏற்படும் கழிவு

5. மறுசுழற்சி செய்யத்தக்க மரக்கிளைக் கழிவுகள் உட்பட தோட்டம் மற்றும் தோட்டக்கரை பெருமளவுக் கழிவுகள்

6. மறுசுழற்சி செய்யத்தப்ப, மறுசுழற்சி செய்ய இயலாத கழிவுகள் உட்பட பிற உயிர் மக்காத (உலர்) கழிவுகள்

நிபந்தனை : தொடக்கத்தில் மேற்குறிப்பிட்ட வகையினங்கள் அளவில் குப்பைகளை உருவாக்குவோரிடம் காணப்படும் விழிப்புநிலையின் தன்மை, நகரத்தில் கிடைக்கும் உள் கட்டமைப்பு ஆதாரம் ஆகியவற்றைக் கணக்கிற்கொண்டு பல்வேறு நிலைகளில் இந்தச் சட்டத்தை நிறைவேற்ற ஆணையாளர் தனித்தனியாக அறிவிக்கலாம்.

52. பிரிந்த கழிவுகளை ஒப்படைத்தல் அடுக்குமாடிக் கட்டடம் / சமுதாய அளவு / கூட்டுறவு சங்கம் ஆகிய இடங்களில் குப்பை உருவாகும் இடத்தில் அல்லது குப்பையை ஒப்படைக்கும் இடத்தில், குப்பையை ஒன்றாக்காமல் / தனித்தனியாக வைக்க வேண்டும். குப்பையை ஒருங்கு சேர்த்து மேலே குறிப்பிட்ட குழுவுக்கு ஒப்படைக்க வேண்டும். ஒப்படைக்கும் குப்பை கலக்கியதாக இருந்தால் அது துணை விதிகளை மீறியதாகக் கருதப்படும். ஆதற்காக அபராத அட்டவணையின்படி தண்டம் விதிக்கப்படும். மீண்டும் மீண்டும் விதிகளை மீறுதல் தொடர்ந்து தண்டம் செலுத்த வேண்டி வரும்.

நிபந்தனை : கொள்கலன் கட்டாய வண்ணக் குறியீடும் பிற விவரக்குறியீடும், ஒருங்கு சேர்க்கும் வகை, கையால் செய்யாமல் பாதுகாப்பாக, எளிமையாகக் செயல்படுத்த வெவ்வேறுவகை திடக்கழிவுகளை ஒப்படைத்தல் அல்லது வெவ்வேறு வகை திடக்கழிவுகளை உருவாக்குபவர் கடைப்பிடிக்க வேண்டியன பற்றி ஆணையாளர் தனித்தனியாக அவ்வப்போது அறிவிக்கலாம்.

53. பிரிக்கப்பட்ட உயிரி மக்கும் குப்பை உயிரி மக்கும் நகராட்சி திடக்கழிவு (அட்டவணை–iii பட்டியலின்படி), குப்பை உருவாக்குவோரால் உரமாக்க வில்லை என்றால், குப்பை உருவாக்குவோர் அவ்வகைக் குப்பையைத் தங்கள் வளாகத்தில் ஒருங்கு சேர்த்து வைக்கவேண்டும். அவவாறான குப்பை உருவாக்குவோர் ஒவ்வொருவரும் அதனைக் கொள்கலன் பொருத்தப்பட்ட கைவண்டிக்கு அல்லது குறிப்பிட்ட பெருமளவு வணிகக் குப்பை உருவாக்குபவர் உயிரி மக்கும் குப்பை பெறுவதற்காக உள்ள வாகனத்திற்கு அல்லது தொடர்புடைய உதவி ஆணையாளர்அவ்வப்போது அறிவித்தல்படி கோயம்புத்தூர் மாநகராட்சி (CCMC) நாள்தோறும் அவ்வகை கழிவை எடுத்துச் செல்லும் ஒதுக்கப்பட்ட உயிரி மக்கும் குப்பை ஒருங்கு சேர்த்தல் மையத்திற்கு ஒப்படைத்தலுக்கும் உறுதிபடுத்த வேண்டும்.

5.4 குப்பை உருவாக்குவோர் அனைவரும் கலப்பு உரமாக்கல் : கழிவக் கொண்டு செல்லும் போக்குவரத்துச் செலவைக் குறைக்கும் பெரு நோக்கத்தை அடையும் கருத்தோடு வட்டார அளவில் உரமாக்கலை ஊக்குவிக்க வேண்டும்.

5.5 குறிப்பிட்ட வீட்டு அபாயகரமான கழிவை (அட்டவணை–iii ல் பட்டியலிட்டபடி) உருவாக்கும் ஒவ்வொருவரும் ஒருங்கு சேர்த்து கோயம்புத்தூர் மாநகராட்சி (CCMC) ஆல் குறித்தபடி வாரந்தோறும் வழங்கப்படும் கழிவைப்பெறும் வாகனத்தில் அல்லது தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் இவ்வாறான கழிவைப்பெற அங்கீகாரம் வழங்கிய முகமையிடம் அல்லது இவ்வாறான கழிவை உரிய வகையில் அகற்றுவதற்காகத் தமிழ்நாடு அரசு அல்லது தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் நியமிக்கப்பட்டட மையத்தில் ஒப்படைக்க வேண்டும்.

5.6 திருத்தாத உயிரி மருத்துவக் கழிவை (அட்டவணை –iv ல் பட்டியலிட்டபடி) குறிப்பிட்டவகை மூடிய கொள்கலனில் அடைத்து வைத்து இவ்வகைக் கழிவு உருவாக்குவோர் ஒவ்வொருவரும் வாரந்தோறும் / அவ்வப்போது கோயம்புத்தூர் மாநகராட்சி (CCMC) ஆல் அளிக்கும் அல்லது தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம் அதிகாரம் வழங்கிய பிற முகமை பெறுதல் வாகனத்திற்கு அல்லது இவ்வகைக் கழிவைத் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம கட்டளை இட்டுள்ள முறையில் உயிரி மருத்துவ கழிவு (மேலாண்மையும் கையாளுதலும்) சட்டம் 1998 (2000–ல் திருத்தப்பட்டுள்ளது) இன்படி பெற்று அப்புறப்படுத்துவதற்கு ஒதுக்கப்பட்ட மையத்திற்கு ஒப்படைக்க வேண்டும்.

5.7 கட்டுமானம் மற்றும் இடித்தல் கழிவினை (C & D) கழிவு) ஒருங்கு சேர்த்து தனித்தனியாக நகர திடக்கழிவு (மேலாண்மை மற்றும் கையாளுதல்), சட்டம் 2000த்தின்படி ஒப்படைக்க வேண்டும். இந்தத் துணைவிதிகள், சிறிய (C & D) கட்டுமானம் மற்றும் இடிக்கும் கழிவு உருவாகும் இடத்திலேயே கழிவினைத் தனித்தனியாகப் பிரித்துச் சேர்த்து வைக்க வேண்டியது. குப்பை உருவாக்குவோர் (வீட்டளவில்) வகையினர்

பொறுப்பு என்று குறிப்பிடுகின்றன. கழிவு உருவாக்குவோர் கோயம்புத்தூர் மாநகராட்சி (CCMC) அல்லது அதன் முகமை உதவிப்பிரிவுடன் பேச வேண்டும். பின்னர் அவர்கள் கழிவு உருவாக்குவோரிடமிருந்து பிரிக்கப்பட்ட (C & D) கழிவினை எடுக்க குறிப்பிட்ட கட்டணம் செலுத்திய பின் வண்டி அனுப்புவார்கள். பின் கழிவினைச் செய்முறை / நீக்கம் இடத்திற்குக் கொண்டு செல்வார்கள். இவ்விபரங்கள் கோயம்புத்தூர் மாநகராட்சி (CCMC) தொடர்புடைய வார்டு அலுவலகங்களில் உள்ளன. கீழ்ப்படியாமை கோயம்புத்தூர் மாநகராட்சி (CCMC) நிர்ணயித்த தண்டம் கட்ட வேண்டி வரும்.

**5.8** பிற அனைத்து உயிரி மக்காத கழிவு (உலர்), மறுசுழற்சி செய்ய தக்கவை மறுசுழற்சி செய்ய இயலாதவை ஆகிய இரண்டும் துணைவிதிகள் **5.1 (6)** சுட்டியபடி குப்பை உருவாக்குவோர் ஒவ்வொருவரும் ஒருங்குசேர்த்து உலர் கழிவைப் பெறும் கோயம்புத்தூர் மாநகராட்சி (CCMC) அல்லது அதன் முககையின் வாகனத்திடம் தொடர்புடைய உதவி ஆணையாளர் அவ்வப்போது இவ்வாறான கழிவைப்பெறும் அல்லது அங்கீகார பெற்ற உலர்க் கழிவை வகைப்படுத்தும் மையங்கள் ஆகியவற்றைப்பற்றி அறிவித்தபடி குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட இடத்தில் ஒப்படைக்க வேண்டும்.

**5.9** மின்னணுக் கழிவுகளைப்பெறுதல் : வீடு / ஸ்தாபனம் / நிறுவனம் ஆகிறவற்றில் உருவாகும் மின்னணு கழிவுப் பொருள்களை ஒப்படைக்க கோயம்புத்தூர் மாநகராட்சி (CCMC) பெறுதல் இடம் வழங்குகிறது. தகுந்த முகமையை ஈடுபடுத்தி அல்லது வேறுவகையில் இக்கழிவு அப்புறப்படுத்தப்படும்.

**5.10** பெருமளவு தோட்டம், தோட்டக்கலைக் கழிவுகளைப் பிறவற்றுடன் சேர்க்காமல் வைத்து அவை உருவாகும் இடத்திலேயே உரமாக்க வேண்டும். கோயம்புத்தூர் மாநகராட்சி )ஊஊஆஊ) தோட்டக்கலைப் பிரிவின் பொறுப்பு அதிகாரி மரக்கிளை நறுக்கித் திருத்தம் செய்தல், நறுக்கிவற்றைச் சேர்த்து வைத்தல் மற்றும் அவற்றைக் பெறுதல் – அட்டவணை உட்பட ஒப்படைத்தல் ஆகிய மரம் பற்றிய அறிவுரைகள் / விதிமுறைகள் தெரிவிப்பார். உருவாகும் இடத்தில் உரமாக்க எங்கு இயலவில்லையோ கோயம்புத்தூர் மாநகராட்சி (CCMC) தொடர்ந்து அவற்றைப் பெற்று தோட்டம், தோட்டக்கைக் கழிவுகளைத் தனித்தனியாகப் பிரித்து அவ்வப்போது அறிவித்திருப்பதற்கு ஏற்ப தக்க கட்டணம் விதித்து எடுத்துச்செல்ல வேண்டும்.

**5.11** சமுதாயக் கழிவு சேகரிப்பு மையங்கள் : கோயம்புத்தூர் மாநகராட்சி (CCMC) முகமை வாகனத்தின் மூலம் நகர எவ்வகைத் திடக்கழிவை நேராகப் பெறுதல் சமுதாயக் கழிவு சேகரிப்பு மையம் திறந்தவெளியில் அல்லது வளாகத்திற்குள் மூடிய கொட்டாரத்தில் அல்லது பொது இடத்தில் அமைந்திருந்தாலும், பிரித்த கழிவுகள் தனித்தனியாக கொள்கலன்களில் போட்டு வைக்கும் வகையில் தனித்தனியாக கொள்கலன்

அளிக்க வேண்டும். கழிவுகளைக் கொள்கலனுக்குள் போடவேண்டும் அதைச் சுற்றியோ பக்கத்திலோ கொட்டக்கூடாது.

**5.12** கழிவை எரித்தல் எவ்வகைத் திடக்கழிவையும் சாலை ஓரத்தில், குவித்து வைக்கும் இடத்தில் இல்லது வேறு தனியார் அல்லது பொது சொத்தில் எரித்து நீக்குதலுக்குத் தடை உள்ளது. இது தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் (TNPCB) அங்கீகாரம் வழங்கியுள்ள குறிப்பிட்ட வகைக் கழிவினை, மூடிய இடத்தில் சேர்த்து சாம்பலாக்கும் வசதி கொண்டதற்குப் பொருந்தாது.

**6.0** கோயம்புத்தூர் மாநகராட்சி (ஊஊஆஊ) யின் கட்டாயப் பொறுப்புகள்

**6.1** சட்டமைப்பு வசதிகள்: நகராட்சி திடக்கழிவு (MSW) தெரு பெருக்குதல் / மழைநீர் / சாக்கடை தூய்மைப்படுத்தல் போன்றவற்றை வாசல்தோறும் பெறுவதற்கு கோயம்புத்தூர் மாநகராட்சி (CCMC) போதுமான அளவு உள்கட்டமைப்பு வசதி வழங்க வேண்டும்.

**6.2** போக்குவரத்து ஒப்பந்தக்காரருக்கு கோயம்புத்தூர் மாநகராட்சி (CCMC) ஊழியர்களுக்கு எதிரான நடவடிக்கை, முகமையின் ஊழியர் அல்லது கோயம்புத்தூர் மாநகராட்சி (CCMC) ஊழியர் பிரிக்கப்பட்ட கழிவுகளைக் கழிவு பெறுமிடத்தில் ஒன்று சேர்த்தால் அல்லது நேர அட்டவணைப்படி கழிவுகளைப் பெறாமலிருந்தால் கோயம்புத்தூர் மாநகராட்சி (CCMC) முகமை மற்றும் / அலலது கோயம்புத்தூர் மாநகராட்சி (CCMC) ஊழியருக்கு எதிராக அபராதம் விதிப்பது உட்பட கண்டிப்பான விரைவான நடவடிகக்கை எடுக்க வேண்டும்.

**6.3** குடிமக்கள் ஆதார அடித்தளம் கழிவை மறுசுழற்சி செய்ய மக்களுக்கு வசதி ஏற்படுத்தித் தரும் பொருட்டு கோயம்புத்தூர் மாநகராட்சி (CCMC) இன் அமர்த்தம் பெற்ற அதிகாரி கோயம்புத்தூர் மாநகராட்சி (CCMC) பதிவுபெற்ற உரமாக்கும் வல்லுநர், உரிமம் பெற்ற உடைசல் வணிகர், மறு சுழற்சிக் கொன்கலன் வணிகர், குப்பைத் தொட்டி உருவாக்குவோர், மறு சுழற்சி சிறப்புத் தன்மை கொண்ட முகமை போன்ற பட்டியலைத் தயாரித்து வெளியிட வேண்டும். செயல்முறை தொடர்பாகப் பயிற்சி / வழிகாட்டுதல் மற்றும் உதவி அளிக்கும் அலுவலர், பதிவு பெற்றவர்கள் / அமைப்புகள் ஆகியோரின் பெயர்களும் தொலைபேசி எண்களும் அளிக்க வேண்டும் இந்த விவரம் கோயம்புத்தூர் மாநகராட்சி (CCMC) இன் இணைய தளத்தில் www.ccmc.gov.in ல் கிடைக்கச் செய்ய வேண்டும்.

**6.4** நகராட்சி திடக்கழிவு (SWM) பணிக்காகப் பயனர் கட்டணம் தொழில் கழிவுக் கட்டணம் CCMC–ன் **24.09.2007** நாளிட்ட மாமன்றம் தீர்மானம் எண் 4 பயனர் கட்டண அட்டவணைப்படி (அட்டவணை –V) திடக்கழிவு மேண்மைத் திட்டத்தின் நடவடிக்கை மற்றும் பராமரிப்புச் செலவை ஈடுகட்டும் பொருட்டு SWM

பணிக்காகப் பயனர் கட்டணம் விதிக்க வேண்டும் எனவும் கழிவு உருவாக்கும் பொதுமக்களிடமிருந்து அதைப் பெறவேண்டும் எனவும் முடிவெடுக்கப்பட்டது. கோயம்புத்தூர் மாநகராட்சி (CCMC) தங்கும் விடுதி, உணவகம், பிற கழிவு உருவாக்குவோர் ஆகியோருக்குப் பொருந்தும் தொழில் கழிவுக் கட்டணத்தையும் அதனைக் கழிவின் அளவுடன் இணைத்து, திடக்கழிவு உருவாக்குவோருக்கு ஏதாவது உரிமம் வழங்கி இருந்தால் உரிமக்கட்டணம் விதித்து ஒழுங்குபடுதூதும் இவ்வாறான தகவல்கள் ஊர்ப்பிரிவு அலுவலகங்களிலும் கோயம்புத்தூர் மாநகராட்சி (CCMC) இணையதளத்திலும் கிடைக்கும்.

**6.5** வட்டார உயிரி– மக்கும் கழிவு திருத்தம் செய்யும அலகுகள், கோயம்புத்தூர் மாநகராட்சி (CCMC) வசதி, தேவை ஆகிறவற்றிற்கு ஏற்ப சிறு அளவில் கழிவு திருத்தம் செய்யும் அலகுகளைப் பெரிய காலி இடங்களில் (பொது பூங்கா, விளையாட்டு மைதானம், பொழுதுபோக்கு மைதானம், தோட்டம், சந்தை, கோயம்புத்தூர் மாநகராட்சி (CCMC) அல்லது வேறு பொது அதிகார அமைப்புகள் அல்லது அரசு துறை அல்லது இவ்வாறான அலகுகள் உருவாகக் காரணமாக இருந்து ஏற்றுக் கொள்ளும் முகமை / காவல்பொறுப்பாளர் / ஒப்பந்தக்காரர் / பொது இடங்களின் பராமரிப்புக்குப் பொறுப்பாளரான குத்தகைக்காரர் அல்லது தனிப்பட்ட சொந்தக்காரர் / இவ்வாறான காலி இடங்களில் குடியிருப்போர்) ஏற்படுத்தும் இவை உள்ளூர் சமுதாயத்திற்குச் செய்முறை மாதிரிகளாகச் செயல்படும், இவற்றை உரிய வகையில் சுற்றுச்சூழலுக்குச் சீரழிவு ஏற்படா வகையில் பராமரிக்க வேண்டும்.

**6.6** வழிபாட்டு இடங்கள், இறுதிச்சடங்கு ஆகியவற்றில் உருவாகும் உயிரி மக்கும் குப்பை சிறப்புக் கொள்கலன்கள் அல்லது “சமுதாயக் கழிவு சேகரிக்கும் தொட்டிகள்” –இல் அறிவித்தவாறு கடற்கரை, ஏரி, குளம் போன்ற நீர்நிலைகள் அருகில் குறிப்பிட்ட சிற இடங்களில் பூக்கள், இலைகள், பழங்கள் போன்ற உயிரி மக்கும் குப்பை பெறுவதற்கு ஒவ்வொரு வார்டின் உதவி அணையாளர் தாமே மேற்கொள்ள வேண்டும். அல்லது விருப்புமுள்ள அமைப்புகளுக்கு அதிகாரம் வழங்கவேண்டும். இவ்வாறான கொள்கலனில் பெற்ற தொகுப்பை பொருத்தமான இடத்தில் உரமாக்க வேண்டும். கொள்கலன்கள் உரமாக்கும் அலகுகள், ஆகியன இந்நோக்கத்திற்குத் தகுந்த ஆள்களைப் பெற்றிருக்க வேண்டும்.

**6.7** குறிப்பிட்ட சிற்சில இடங்களிலிருந்து கழிவு பெறுதல் சேவை : குப்பை உருவாக்குவோர் சேர்த்து வைத்த கழிவை கோயம்புத்தூர் மாநகராட்சி (CCMC) ஏற்பாடு செய்யும் கொள்கலன் பொருத்திய கைவண்டியில் ஒப்படைக்க பொது அல்லது தனியார் சாலையின், குறிப்பிட்ட இடத்திற்குக் கொண்டுவரும் நகராட்சி திடக்கழிவு (MSW) கழிவினைப் பெறுவதற்கு அமர்த்தப்பட்ட அதிகாரி ஏற்பாடு செய்வார். தொடர்புடைய உதவி ஆணையாளர்களால் முன்கூட்டியே அறிவிக்கப்பட்டவாறு குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட இடம் என்று வண்டி செல்லும் வழித்தடத் திட்டத்தின்படி சிற்சில இடங்களிலிருந்து கழிவு

பெறுவதற்கும் குறிப்பிட்ட வகைக் குப்பைகளை வெவ்வேறு இடங்களிலிருந்து பெறுவதற்கும் கொள்கலன் பொருத்திய கைவணடிச் சேவையை கோயம்புத்தூர் மாநகராட்சி (CCMC) வழங்கும்.

**6.8** உருவாகும் இடத்தில் பெறுதல் : தொடர்புடைய உதவி ஆணையாளர் அறிவித்தபடி கோயம்புத்தூர் மாநகராட்சி (CCMC) கட்டடத்தின் வளாகத்திற்குள் நகராட்சி திடக்கழிவு (MSW) உருவாகும் இடத்தின் அல்லது கட்டடத் தொகுதியின் வளாகத்தில் வைத்துள்ள கழிவு சேர்த்து வைக்கும் கொள்கலன்களிலிருந்து கோயம்புத்தூர் மாநகராட்சி (CCMC) வாகனங்கள் / சுகாதாரப் பணியாளர் குறிப்பிட்ட நேரத்தில் சென்று எடுக்க ஏற்பாடு செய்கிறது.

**6.9** பள்ளம் நிரப்புதலில் பெறப்பட்ட கழிவுகளின் தகவல் : வெவ்வேறு பள்ளம் நிரப்புதக்குச் செல்லும் ஒவ்வொருவகை கழிவுகளின் அளவு, குறிப்பிட்ட இடைவெளிகளில் கழிவு செயல்முறைக்கு உள்ளாகும் இடம் ஆகியன பற்றிய தகவலை கோயம்புத்தூர் மாநகராட்சி (CCMC) வெளிப்படையாக வெளியிடும் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்வதற்கு இவ்வகைக் குறிப்புகள் வார்டு அலுவலகங்களிலும் கோயம்புத்தூர் மாநகராட்சி (CCMC) இணைய தளத்திலுத் கிடைக்கும்.

**6.10** பொது இடத்தில் கமுதாயக் கழிவு ஒருங்கு சேர்ப்பு மையம் : விதிவிலக்கான நிகழ்வுகளில் எங்குக் குறிப்பிட்ட இடங்களில் அல்லது குப்பை உருவாகும் இடத்தில் பெறுதல் இயலாமையாக உள்ளதோ அல்லது தற்போதைக்குத் தொடங்கப்படாததாக இருக்கிறதோ, கோயம்புத்தூர் மாநகராட்சி (CCMC) பொதுச் சாலையில் அல்லது பொது இடங்களில், எங்குத் தேவையோ எங்கு முடியுமோ அங்கு, உதவி ஆணையாளர் தீர்மானித்தவாறு அல்லது ஒரு முகமையின் மூலம் குப்பை உருவாகும் இடத்திலேயே அல்லது குறிப்பிட்ட இடத்தில், தேவையான இடைவெளிகளில் கொள்கலன் பொருத்திய கைவண்டியில் பெறுதல் இயலுவது ஆகும் வரை சமுதாய கழிவுச் சேகரிப்பு மையங்களை ஏறபடுத்தி பராமரிக்கும் தொடர்புடைய கழிவு உருவாக்குவோர் பிரிக்கப்பட்ட கழிவுகளைச் சமுதாய கழிவுச் சேகரிப்பு மையத்தில் ஒப்படைக்க வேண்டும். அங்கிருந்து கோயம்புத்தூர் மாநகராட்சி (CCMC) எடுத்துச் செல்லும். இந்தச் சமுதாய கழிவுச் சேகரிப்பு மையத்தில் கோயம்புத்தூர் மாநகராட்வி (CCMC) அல்லது பிரித்தல், பொதுத்தொல்லை தவிர்ப்பு, உடல்நலக்கேடு ஆகியவற்றில் இணக்கத்தை உறுதிபடுத்தும் அதன் முகமைகளின் ஆள்கள் அமர்த்தப்பட்டிருப்பர். ஒவ்வொரு சமுதாயக் கழிவுச் சேகரிப்பு மையத்திலும் உயிரி மக்கும் குப்பை, உயிரி மக்காத குப்பை ஆகியவற்றிற்காகக் குறைந்தது இரண்டு தனித்தனியான கொள்கலன்கள் இருக்கும் இயன்றால் இவ்விடங்களில் உரமாக்குதலும் மேற்கொள்ளப்படும். இவ்வாறான மையங்கள், இங்குள்ள ஏற்பாடுகள், கழிவு பெறுதல் அட்டவணை ஆகியவைப் பற்றிய விவரங்கள் வார்டு அலுவலகங்களிலும் கோயம்புத்தூர் மாநகராட்வி (CCMC) இணைய தளத்திலும் கிடைக்கும். தொடர்புடைய வார்டு அலுவலக

உதவி ஆணையாளர் இந்தச் சமுதாய குப்பைத் தொட்டி நிரம்பி வழியாதவாறும் குப்பை பொறுக்குவோர், தெரு விலங்குகளால் சிதறி தெறிக்காதவாரும் இருக்கப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

**6.11** அனைத்து 12 வாழிடங்களுக்கு மேலுள்ள அடுக்குமாடிகள் ஒரு பொது இடத்தில் தனியான குப்பை சேகரிப்பு கொட்டாரம் / வசதி தங்கள் வளாகங்களுக்குள் கொண்டிருக்க வேண்டும். அவர்களால் ஏற்படுத்தும் கழிவினை, இந்தத் துணைவிதிகள் வேறெங்கோ குறிப்பிட்டள்ளவாறு பிரித்த நிலையில் சேர்த்து வைக்க வேண்டியது அந்தக் கட்டடத்து (RA) தங்கியிருப்போர் / உரிமையாளர் இன பொறுப்பாகும். அந்தக் கழிவினைப் பிரித்த நிலையில் அந்த இடத்திலிருந்து சுகாதாரப் பணியாளர் / முகமை பெறுவார்.

**6.12** உலர்க் கழிவு வகைப்படுத்தும் மையம் மறுசுழற்சி செய்யப்த்தக்க, மறுசுழற்சி செய்ய இயலாத கழிவுகள் வகைப்படுதுதலை ஒழுங்குபடுத்துதலை எளிதாகவும் தொடர்புடைய உதவி ஆணையாளர் தேவையான, இயன்ற அளவு வகைப்படுத்தல் மையங்களை உருவாக்கித் தருவார். அங்கு உலர்க் கழிவுகளைப் பெறுதலும் வகைப்படுத்துதலும் நடைபெறும். இந்த வகைப்படுத்துதல் மையங்கள் கோயம்புத்தூர் மாநகராட்சி (CCMC) நிலத்தில் அல்லது அரசு நிலத்தில் அல்லது பிற அமைப்புகள் இடத்தில் இந்த நோக்கதிற்காக மட்டும் இருக்கும். அல்லது கொட்டாரம் வடிவில் அல்லது ஒரு பொருத்தமான பொது இடத்தில் திறந்த கூடாரமாக இருக்கும். இவை குப்பை பொறுக்குவோர் / உரிமம் பெற்ற மறு சுழற்சியாளர் பதிவு பெற்ற கூட்டுறவு சங்கம் அல்லது கோயம்புத்தூர் மாநகராட்சி (CCMC) அதிகாரம் வழங்கிய / அமர்த்தப்பட்ட முகமை–ஆல் ஆள் அமர்த்தப்பட்டதாக / இயக்கவதாக இருக்கும். வகைப்படுத்திய பின் இருக்கும் மறுசுழற்சி செய்ய இயலாத கழிவை இவ்வகை வகைப்படுத்தும் மையத்திலிருந்து அவ்வப்போது கழிவு மாற்றும் நிலையத்திற்கும் அங்கிருந்து திருத்தம் செய்யும் அல்லது அகற்றும் வசதி இடத்திற்கும் கொண்டு செல்ல வேண்டும். இவ்வகை உலர்க்கழிவு வகைப்படுத்தும் மையத்தில் வெவ்வேறு வகைக் கழிவுகளை அறிவிக்கப்பட்ட விலையில் வாங்குவதற்கும் விற்பதற்கும் வசதி இருப்பதைப் பற்றிக் கருதிப்பார்க்கலாம். இது உதவி ஆணையாளரால் அங்கீகாரம் வழங்கப்பட்டதாக இருக்க வேண்டும். இவ்வாறான மையங்கள், கழிவு அவ்வழியில் செல்வோர் கண்ணுக்குப்படாத வகையில் வேலி அமைக்கப்பட்டனவாக / மறைப்பு செய்யப்பட்டனவாக இருக்க வேண்டும்.

**6.13** நேர அட்டவணையும் பெறுதல் செல்வழியும் : i) உயிரி – மக்கும் கழிவு, ii) மறுசுழற்சி செய்யத்தக்க கழிவு மற்றும் மறுசுழற்சி செய்ய இயலாத கழிவு, iii) வீட்டு அபாயகராமான கழிவு என்பன போன்ற பல்வேறு வகை MSW கழிவுகளை நாள்தோறும் மற்றும் வாரந்தோறும் பெறும் நேரம் மற்றும் செல்வழிகள் ஆகியவற்றை உறுதி செய்து அவற்றை முன்கூட்டியே தங்கள் மண்டலம் வார்டு அலுவலகம் ஒவ்வொன்றிலும் தொடர்புடைய உதவி ஆணையாளர்கள் தெரியப்படுத்த வேண்டும். கழிவுகளைப்

பெறுதலில் நேர அட்டவணை செல்வழி ஆகியவற்றில் ஏதாவது மாற்றம் இருந்தால் தொடர்புடைய உதவி ஆணையாளர்கள் வார்டு அலுவலகம் ஒவ்வொன்றிலும் தெரியப்படுத்த வேண்டும். இந்த விவரம் அனைத்து வார்டு அலுவலகங்களிலும் கோயம்புத்தூர் மாநகராட்சி (CCMC) இணைய தளத்திலும் தெரியப்படுத்த வேண்டும். இதைப் போலவே கோயம்புத்தூர் மாநகராட்சி (CCMC) அல்லது அதன் அதிகாரம் பெற்ற முகமைகள் கட்டுமானம் மற்றும் இடித்தல் கழிவு, தோட்டம் மற்றும் தோட்டக்கலை கழிவு ஆகியவற்றைப் பெறும் ஏற்பாடுகளையும் பொதுமக்களுககும் பெருமளவு கழிவு உருவாக்குவோருக்கும் நியமிக்கப்பட்ட தொடர்புடைய பொறுப்பு அலுவலர் அல்லது தொடர்புடைய உதவி ஆணையாளரால் தெரியப்படுத்த வேண்டும்.

**6.14** எதிர்பாரா ஆய்வு : ஆணையாளர், துணை ஆணையாளர், உதவி ஆணையாளர் அல்லது ஆணையாளாரால் நியமனம் செய்த வேறு அதிகாரி இணக்கம் ஏற்படுவதை ஊக்குவதற்காக மாநகராட்சி எல்லைக்கு உட்பட்ட பல்வேறு வார்டுகளில் எந்நேரத்திலும் (இரவு அல்லது பகல்) எதிர்பாரா ஆய்வு மேற்கொள்வார். விதிமீறுதல் இருந்தால் தண்டம் கட்ட வேண்டி இருக்கும். இந்த ஆய்வுகளில் குப்பை ஏதாவது இருப்பதைக் கண்டறிந்தால் அதை கோயம்புத்தூர் மாநகராட்சி (CCMC) அகற்ற வேண்டும்.

**6.15** ஒவ்வொரு வார்டிலும் நடைமுறைப்படுத்தும் குழு : SWM சேவைக்காக கோயம்புத்தூர் மாநகராட்சி (CCMC) தொல்லை கண்டறிபவரை அமர்த்த வேண்டும். நடைமுறைப்படுத்தும் குழு உருவாக்க வேண்டும். அமர்த்தப்பட்ட அதிகாரி தொல்லை கண்டறிபவர், நடைமுறைப்படுத்தும் குழு ஆகியவற்றை மேற்பார்வை செய்வார்.

**6.16** விளம்பரம், மக்கள் தகவல் மையம் : கோயம்புத்தூர் மாநகராட்சி (CCMC) துணை விதிகளின் கருத்துக்களை சைகை, விளம்பரம், துண்டு அறிக்கை, வானொலி தொலைக்காட்சி ஆகியவற்றில் அறிவிப்பு, இதழ்களில் கட்டுரை மற்றும் பிற தக்க வழிமுறையில் ஊடகம் வழி பரப்பலாம். அதனால் பொது மக்கள் அனைவருக்கும் சட்டக் கடமைகள், மற்றும் கோயம்புதுார் மாநகராட்சி (CCMC) இன் மறுசுழற்சி, கழிவு மற்றும் குப்பைச் சேர்வதற்கு எதிரான சேவைகள் மற்றும் அபராதம் பற்றி அறிந்து கொள்ள வாய்ப்பு கிடைக்கும்.

**6.17** அமர்த்தப்பட்ட அதிகாரிகளும் கால இடைவெளிகளில் அறிக்கைகளும் : இந்தத் துணை விதிகளில் குறிப்பிட்டுள்ளவாறு நுண்ணளவுத் திட்டம் மற்றும் நேர அட்டவணையின்படி நிதி ஆண்டில் நடைமுறைப்படுத்த கோயம்புத்தூர் மாநகராட்சி (CCMC)யின் கட்டாயப் பொறுப்புகளை நடைமுறைப்படுத்தும் தொல்லை கண்டறிபவர்கள் அல்லது சுகாதார ஆய்வாளர்கள் பணியைக் கவனிப்பதற்காக ஆணையாளர் ஒரு உயர் அதிகாரியை நியமிக்கலாம். இந்தத் திட்டவட்டமான திட்டங்கள்

மற்றும் நேர அட்டவணைகள் மற்றும் சாதனைகள் அவற்றிற்கு எதிராகப் பற்றாக்குறைக்கான காரணங்கள் ஏதாவது இருந்தால் அதுவும் நியமிக்கப்பட்ட அதிகாரியால் கோயம்புத்தூர் மாநகராட்சி (CCMC)இன் இணையதளம் வழியாக வெளிப்படையாகப் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

**6.18** வெளிப்படைத் தன்மையும் பொது அணுகுமுறையும் : கோயம்புத்தூர் மாநகராட்சி (CCMC)யின் பெருமளவு வெளிப்படைத் தன்மைக்கும் பொது அணுகுமுறைக்கும் உறுதி செய்யும் பொருட்டு, கோயம்புத்தூர் மாநகராட்சி (CCMC)க்குத் தேவையான அனைத்துத் தகவல்களையும் பரப்ப வேண்டியது தேவை. அது கோயம்புத்தூர் மாநகராட்சி (CCMC) இன் இணையதளத்தில் காட்சிக்கு www.ccmc.gov.in ல் வைக்க வேண்டும்.

**6.19** அரசு அமைப்புகளுடன் ஒருங்கிணைப்பு : கோயம்புத்தூர் மாநகராட்சி (CCMC) பிற அரசு முகமைகளுடனும் அதிகார அமைப்புகளுடனும் ஒருங்கிணைந்து தங்கள் அதிகாரத்தின் கீழ் உள்ள பகுதியில் அல்லது இவ்வகை அமைப்புகள் கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதியில் இந்தத் துணைவிதிகளை இணக்கமாக உறுதிபடுத்த வேண்டும்.

**7.0 (CCMC)யின் கட்டாயப் பொறுப்புகள் மற்றும்/ அல்லது ஒருவேளை கழிவுகளை உருவாக்குவோரின் சில குறிப்பிட்ட வகைகள் / சூழல்கள்**

சில தனிப்பட்ட சூழல்களின் இயல்பை மனத்தில் கொண்டு கீழ்க்கண்ட பொறுப்புகள் குறிப்பாகக் கட்டளை ஆக்கப்பட்டுள்ளன.

7.1 சேரி தத்தெடுத்தல் :

சேரிவாழ் மக்கள் தூய்மையற்ற சூழல்கொண்ட சிறு குடில் அமைப்பில் விருப்பத்தினால் இல்லாமல் கட்டாயச் சூழலால் வாழ்கிறார்கள். அவர்கள் முறையான வீட்டுப் பிரிவிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டவர்களாக இருக்கின்றனர். முறையான வீடு தங்கள் வருமானத்திற்கு வாங்க இயலாத ஒன்றாகும்.

**7.1.1** திடக்கழிவு மேண்மைக்காக உதவி ஆணையாளர்கள் சேரி தத்தெடுத்தல் திட்டத்தைத் தாங்கள் வார்டுகளுக்கு உட்பட்ட இதுவரை கொண்டு செல்லாத பகுதிகளுக்கு, எங்கெல்லாம் தகுதிவாய்ந்த சமுதாய அடிப்படையிலான அமைப்புகள் (CBO/ அரசு சாரா அமைப்புகள் (NGO / தன்னார்வ தொண்டு அமைப்புகள் (VSO/முன்னுக்கு வருகின்றனவோ அங்கு நீட்டிக்க வேண்டும். CBOகள்/NGOகள்/VSOகள் அடையாளம் காண்பதற்கு வாய்ப்பில்லை என்றால் மாவட்ட ஆட்சியாளர் அங்கீகாரம் அளித்த சுய உதவிக்குழுவை உட்படுத்த ஏற்பாடு செய்ய வேண்டும்.

7.1.2 எங்குப் பொருந்துகிறதோ அங்கு கோயம்புத்தூர் மாநகராட்சி (CCMC)யின் கொள்கலன் பொருந்திய கைவண்டி வசதி குறிப்பிட்ட நேரங்களில் சேரிக்கு வெளியே MSWவின் பிரிக்கப்பட்ட குப்பையைப் பெறுவதற்கு அளிக்கப்படும்.

7.1.3 விதிவிலக்கான நிகழ்வுகளில், கொள்கலன் பொருத்தப்பட்ட கைவண்டி சேவை தேவையான இடைவெளிகளில் பொது சாலையில் குறிப்பிட்ட இடத்தில் அல்லது தற்போதைக்குப் பிற பொது இடத்தில் வழங்கும் வரை, கோயம்புத்தூர் மாநகராட்சி (CCMC)ஆல் ஆள் பராமரிக்கும் சமுதாய குப்பைத் தொட்டி கையாளப்படும் கழிவு ஏற்படுத்துவோர் அங்குப் பிரிக்கப்பட்ட கழிவுகளைப் போட வேண்டும். அங்கிருந்து கோயம்புத்தூர் மாநகராட்சி (CCMC) அவ்வகைக் கழிவுகளை எடுத்துச் செல்லும். சேரி தத்தெடுத்தல் திட்டத்தில் பங்கேற்கும் CBOகள்/NGOகள்/VSOகள் இவ்வகைச் சமுதாய கழிவு ஒருங்கு சேர்ப்பு மையங்களைப் பராமரித்தலுக்கு உட்படுத்தப்படுவார்கள்

7.1.4 கோயம்புத்தூர் மாநகராட்சி (CCMC) ஆல் தூய்மையைத் தூண்டுவது வார்டு உறுப்பினர்கள், மக்கள் அமைப்புகள், அரசுக் குழுமம், பெருநிறுவனங்கள் அவ்வப்போது சேரிப்பகுதித் தூய்மைக்கும் CBOகள் உடன் சேர்ந்து சேரி தத்தெடுத்தல் திட்டத்தில் பங்கேற்கும் NGO கள் ஆகியனவற்றுடன் சேர்ந்து நடத்தப்படும்.

7.2 வளர்ப்புப் பறவை, மீன், இறைச்சிக்கொட்டில் கழிவு (நியமிக்கப்பட்ட இறைச்சிக் கொட்டில், சந்தைகள் தவிர்த்து மற்ற எல்லா பகுதியிருந்தும்)

7.2.1 நியமிக்கப்பட்ட இறைச்சிக் கொட்டில்களும் சந்தைகளும் தவிர வணிகச் செயல்பாடுகள் விளைவாக வளர்ப்புப்பறவை, மீன், இறைச்சிக் கொட்டில் கழிவுகள் ஏற்படுத்தும் வளாகங்களின் உரிமையாளர்/ தங்கியிருப்போர் கழிவுகளை தனித்தனியாக மூடியவகையில் சுகாதார தன்மையுடன் சேர்த்து நாள்தோறும் குறிப்பிட்ட நேரத்தில் இதற்காக அளிக்கப்பட்டுள்ள கோயம்புத்தூர் மாநகராட்சி (CCMC)யின் பெறுதல் வாகனத்தில் ஒப்படைக்க வேண்டும். இவ்வகைக் கழிவுகளைச் சமுதாய கழிவுத் தொட்டியில் கொட்ட தடை உள்ளது. இது அபராத அட்டவணையில் குறிப்பிட்டவாறு தண்டம செலுத்த வேண்டி வரும்.

7.2.2 இவ்வகைச் சந்தையை மிக உயர்ந்த அளவு உடல் நலமும் தூய்மையும் அளிக்கும் வகையில் புதியவகையில் அமைக்க வேண்டியது கோயம்புத்தூர் மாநகராட்சி (CCMC)யின் பொறியியல் பிரிவு பொறுப்பாகும்.

7.3 விற்பனையாளர்/கூவி விற்போர் :

விற்பனையாளர்/ கூவி விற்போர் அனைவரும் தங்கள் விற்பனை செயல்பாடுகளால் கழிவு ஏதாவது உருவானால். உயிரி மக்கும் மற்றும் பிற கழிவுகளை ஒன்று சேர்க்காமல் போட கொள்கலன் / தொட்டியை விற்பனை செய்யும் இடத்தில் வைக்க வேண்டும். கழிவுகளைச் சரியாகப் பிரித்து கொள்கலன் பொருந்திய கைவண்டியில் அல்லது அருகிலுள்ள சமூகக் கழிவு சேகரிப்புத் தொட்டியில் ஒப்படைக்க வேண்டியது கழிவு உருவாக்குவோர் / விற்பனையாளர் பொறுப்பு ஆகும். இவ்வாறு செய்யவிலை என்றால் அபராத அட்டவணையின்படி தண்டம் கட்ட வேண்டி வரும். விற்பனையாளர் / கூவிவிற்போர் அனைவரும் தங்கள் இடத்தைச் சுற்றியுள்ள பகுதியைத் தூய்மையாக வைக்க வேண்டியது தங்கள் பொறுப்பு ஆகும்.

7.4 வீட்டு நீர்க்கால்

**7.4.1** உரிமையாளர் / தங்கியிருப்போர் தன் / தம் வளாகங்களின் வீட்டு நீர்க்காலில் கழிவு எதுவும் குவிக்கப் படாமலிருக்கப் பார்த்துக் கொள்ள வேண்டியதும் MSW குப்பையைப் பிரித்து கோயம்புத்தூர் மாநகராட்சி (CCMC) முகமையால் அளிக்கப்படும் கழிவு சேகரிக்கும் வாகனத்தில் ஒப்படைப்பதும் தங்கள் பொறுப்பாகும். இவ்வாறு செய்ய தவறுவது அபராத அட்டவணைப்படி தண்டம் கட்ட வேண்டி வரும்.

**7.4.2** வளாகத்தின் உரிமையாளர்/ தங்கியிருப்போர் வீட்டு நீர்க்காலைத் தூய்மைப்படுத்த (CCMC)யின் சேவையைப் பயன்கொள்ள விரும்பினால் அவர்கள் தொடர்புடைய கோயம்புத்தூர் மாநகராட்சி (CCMC)யின் ஊர்ப்பிரிவு (வார்டு) அலுவலகத்தில் விண்ணப்பிக்க வேண்டும். அவ்வப்போது கோயம்புத்தூர் மாநகராட்சி (CCMC) அறிவித்துள்ளபடி கழிவை அகற்றும் கட்டணத்தைச் செலுத்த வேண்டும். வீட்டு நீர்க்காலுக்குச் செல்வதற்குரிய வழி உருவாக்கித் தருவது உரிமையாளரின் / தங்கியிருப்போரின் பொறுப்பாகும்.

7.5 சொந்த/ செல்ல வில§கால் ஏற்படும் குப்பை:

தெருவில் அல்லது பொது இடங்களில் செல்ல விலங்கால் ஏற்படும் கழிவை வழித்தெடுத்தல் / தூய்மையாக்கல் உரிமையாளரின் பொறுப்பு ஆகும். இவ்வகைக் கழிவைச் சரியாக அப்புறப் படுத்த தங்கள் சொந்த கழிவுநீர் அமைப்பால் போதுமான அளவு நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு செய்ய தவறினால் அபராத அட்டவணைப்படி தண்டம் கட்ட வேண்டி வரும்.

7.6 பொதுக்கூட்டங்களும் நிகழ்ச்சிகளும்:

**7.6.1** எந்தக் காரணத்திற்கானாலும் (ஊர்வலம், கண்காட்சி, வட்டக்காட்சி (Circus) பொருட்காட்சி, அரசியல் பேரணி, வணிகம், சமயம், சமூகம் – பண்பாட்டு நிகழ்ச்சி, கண்டனப் பேரணி, ஆர்ப்பாட்டம் முதலியன) பொது இடத்தில் நிகழ்த்தும் பொதுக் கூட்டங்களுக்கும் நிகழ்ச்சிகளுக்கும் காவல்துறை மற்றும்/ அல்லது

கோயம்புத்தூர் மாநகராட்சி (CCMC)யிலிருந்து அனுமதி தேவை. அந்தப் பகுதியுடன் அதை ஒட்டிய பகுதியின் தூய்மைக்கும் உறுதி செய்வது நிகழ்ச்சி அல்லது கூட்ட அமைப்பாளரின் பொறுப்பு ஆகும்.

7.6.2 கோயம்புத்தூர் மாநகராட்சி (CCMC) அறிவித்தபடி திரும்பிப் பெறத்தக்க தூய்மை வைப்புத் தொகையை அமைப்பாளர்/ விண்ணப்பதாரரிடமிருந்து தொடர்புடைய வார்டு அலுவலகம் நிகழ்ச்சிக் காலத்திற்காகப் பெற வேண்டும். இந்த வைப்புத் தொகையை நிகழ்ச்சி முடிந்தவுடன் குறிப்பிட்ட அந்தப் பொதுப்பகுதி தூய்மையான நிலைக்குத் திரும்பி உள்ளது என்பதையும் நிகழ்ச்சியால் ஏற்பட்டுள்ள கழிவுகள் எதாவது இருந்தால் அவற்றை ஒருங்கு சேர்த்து அதற்குரிய இடத்திற்குக் கொண்டு சென்றுள்ளதையும் பார்த்தபின் திருப்பிக் கொடுக்க வேண்டும். (இந்த வைப்புத் தொகை பொது இடத்தின் தூய்மைக்கானது மட்டுமே. சொத்துக்கு சேதம் ஏற்பட்டிருந்தால் அதைச் சரி செய்வதற்குரிய செலவுத் தொகை அல்ல) நிகழ்ச்சியால் ஏற்படும் கழிவைத் தூய்மைப் படுத்துவதற்கு, ஒருங்கு சேர்ப்பதற்கு , கொண்டு செல்வதற்கு கோயம்புத்தூர் மாநகராட்சி (CCMC) யின் சேவையை நிகழ்ச்சி அமைப்பாளர்கள் பயன்படுத்த விரும்பினால் அவர்கள் தொடர்புடைய (CCMC)யின் உதவி ஆணையாளருக்கு விண்ணப்பிக்க வேண்டும். இதற்காக மாமன்றம் நிர்ணயித்துள்ள தேவையான கட்டணத்தைச் செலுத்த வேண்டும்.

7.7 தனியார் சொத்தில் உள்ள கொள்கலன்

தனியார் சொத்தின் ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது தங்கியிருப்போரும் அவரது/ அவர்களது வளாகத்திற்குள் சொந்த குப்பைத் தொட்டி வைக்க வேண்டும். அவ்வாறு வைக்கும் தொட்டி உரியவாறு மூடி இருக்க வேண்டும்.

7.8 தெருச்சாலையில் சீருந்து (Car) நிறுத்துவதில் தொல்லை

தனியார் சீருந்து/பிற வாகனங்கள் பொதுத் தெருவில் அல்லது சாலையின் இரவு முழுவதும் நிறுத்தி வைத்தால் அல்லது பொது வணிகப்பகுதியில் பகல் நேரத்தில் நிறுத்தி வைத்தால் வாகனத்திற்கு அடியிலுள்ள சாலையைப் பெருக்க இயலாது. அவ்வாறான சாலையைப் பெருக்க இயலாத இடங்களைத் தூய்மைப்படுத்துவது சீருந்து / பிற வாகனங்கள் உரிமையாளார் பொறுப்பு ஆகும். அல்லது அட்டவணை 1–ல் குறிப்பிட்டவாறு அபராதம் செலுத்த வேண்டும்.

7.9 பிற பொது இடங்கள்

பொது வளாகங்களின் உரிமையுள்ளவர்/ தங்கியிருப்போரான அரசு/அரசு நிறுவனம், சட்டபூர்வ அமைப்புகள் இந்தத் துணைவிதிகளைத் தங்கள் வளாகங்களில் உரிய முறையில் நடைமுறைப்படுத்த பொறுப்புள்ளவர்

ஆவர். அவர்கள் மாமன்றம் நிர்ணயிக்கும் தேவையான சேவைக் கட்டணத்தை கோயம்புத்தூர் மாநகராட்சி (CCMC)க்குக் கட்ட வேண்டும்.

8.0 இந்தத் துணை விதிகளை மீறினால் செலுத்தும் தண்டம்

8.1 இந்தத் துணை விதிகள் தொடங்கிய நாளும் அதற்குப் பின்பும் பழக்கப்படும் / எச்சரிக்கைக் காலம் 90 நாள்கள் உண்டு. அதற்குப் பிறகு இந்தத் துணைவிதிகளை மீறுதல் இருந்தால் அபராத அட்டவணை (அட்டவணை–1) படி இந்தத் துணைவிதி மீறும் நிகழ்வு ஒவ்வொன்றுக்கும் அபராதத் தொகையுடன் தண்டிக்கப்படுவர். கழிவு உருவாக்குபவர் இந்தத் துணைவிதிகள் ஏதாவது ஒன்றை மீறுவதாக கண்டால் அடுத்த முறை தண்டத் தொகை இரட்டிப்பாகும்.

8.2 துணை விதிகளை மீறும் யாராவது ஒருவர் அல்லது மாசுப்படுத்துபவர் அட்டவணை –1ல் குறிப்பிட்டுள்ளபடி தண்டத்தொகை கட்ட இயலவில்லை என்றால் அவன்/அவள்–க்கு எதிராக நகரக் காவல் சட்டம் மற்றும் மாவட்டக் காவல் சட்டம்/ இந்திய குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின்படி வழக்கு தொடரப்படும்.

9 தண்டனை

துணைவிதிகளில் குறித்துள்ள விதிகளை மீறுபவர் அல்லது துணைவிதிகளில் குறித்துள்ள விதிகளை மீறும் 9 வயதுக்குட்பட்ட குழந்தைக்குப் பாதுகாவலனாக இருப்போர் நடைமுறையில் உள்ள சட்டத்தின் அடிப்படையில் தண்டனைக்கு உரியவர் எனக் கருதப்படுகின்றனர்.

10. மேல் முறையீட்டிற்கு உரிமை

கோயம்புத்தூர் மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மைத் துணைவிதிகள் 2010 ஆல் இடர் உற்ற அல்லது பாதிப்படைந்த யாரும் ஆணையாளருக்கு மேல் முறையீடு செய்ய உரிமை உள்ளவர்களாவர். இந்தத் துணை விதிகள் கோயம்புத்தூர் மாநகராட்சி மாமன்றத்தின் உரிய ஒப்புதல் பெற்ற பின் நடைமுறைக்கு வந்துள்ளன.

ஆணையாளர்,<br>
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அட்டவணை– I

அபராதப் பட்டியல்

| வ. எ ண் | துணை விதிகள் | உட்பிரிவும் / துணை விதிகள் விளக்கமும் | சட்டத்தை மீறினால் செலுத்த வேண்டிய தண்டத் தொகை |
|---|---|---|---|
| **துணைவிதி எண். 4.1 குப்பை கொட்டத் தடையும், பிற தொல்லைக்குரியதும் மற்றும் தூய்மைப் பகுதிக்கு உறுதிதருவதும்** | | | |
| 1. | 4.1 லிருந்து 4.4 | பொது இடத்தில், தனியார் சொத்தில் வண்டியிலிருந்து குப்பைகளை எறிதல், கடைகளிலிருந்து /வணிக நிறுவனங்களிலிருந்து குப்பைகளை எறிதல் | ரூ. 500 |
| 2. | 4.5 பொதுத்தொல்லை உருவாக்கல் | துப்புதல் | ரூ. 100 |
| 3. | | குளித்தல் | ரூ. 100 |
| 4. | | சிறுநீர் கழித்தல் | ரூ. 100 |
| 5.. | | திறந்தவெளியில் மலம் கழித்தல் | ரூ. 100 |
| 6. | | பொது இடத்தில் விலங்கு/பறவைக்குத் தீனி கொடுத்தல் | ரூ. 500 |
| 7. | | வாகனங்களை கழுவுதல் | |
| | | i) இரு சக்கரம் | ரூ. 100 |
| | | ii) இலகு இயக்கி வாகனம் (L/W)<br>(சீருந்து, ஜீப்பு, வேன் முதலியன) | ரூ. 500 |
| | | iii) கன இயக்கி வாகனம் (H/W) (சரக்குந்து, பேருந்து, பின்னிணைந்த ஊர்தி (Trailer) | ரூ. 1000 |
| 8. | | சமையல் பாத்திரம் கழுவுதல் / துணி துவைத்தல் / வேறு பொருள் கழுவுதல் | ரூ. 100 |
| 9. | 4.6 தூய்மைப்பகுதிக்கு உறுதிதருவது | ஊரிமையாளர் / தங்கியிருப்போர் ஒரு வளாகத்திற்கு | ரூ. 1000 |
| **துணை விதி எண் 5 : பிரித்தல், ஒருங்கு சேர்த்தல், ஒப்படைப்பு பெறுதல்** | | | |
| 10. | 5.1 லிருந்து 5.2 | பிரிக்காததும் குறிப்பிடப்பட்ட தனித்தனியான தொட்டியில் ஒருங்கு சேர்க்காததும் | |
| | | அ) தனியாள் | ரூ. 500 |
| | | ஆ) பெருமளவு குப்பை உருவாக்குபவர் | ரூ. 1000 |
| 11. | 5.3 | உயிரிமக்கும் குப்பையைக் குறிப்பிட்ட வகையில் பிரிக்காமல் ஒப்படைத்தல் | ரூ. 500 |

| | | | |
|---|---|---|---|
| 12. | 5.5 | குறிப்பிட்ட அபாரயகரமான கழிவைக் குறிப்பிட்ட வகையில் பிரிக்காமல் ஒப்படைத்தல் | |
| | | அ) தனியாள் | ரூ. 1000 |
| | | ஆ) பெருமளவு குப்பை உருவாக்குபவர் | ரூ. 10000 |
| 13. | 5.6 | உயிரிமருத்துவக் கழிவைக் குறிப்பிட்ட வகையில் பிரித்து திருத்தம் செய்யாமல் ஒப்படைத்தல் | ரூ. 25000 |
| 14. | 5.7 | கட்டுமானம் இடித்தலில் உருவாகும் கழிவைக் குறிப்பிட்ட வகையில் பிரிக்காமல் ஒப்படைத்தல் | ரூ. 25000 |
| 15. | 5.8 | உலர் கழிவைக் குறிப்பிட்ட வகையில் பிரிக்காமல் ஒப்படைத்தல் | ரூ. 500 |
| 16. | 5.9 | தோட்டக்கழிவை, மரக்கழிவை குறிப்பிட்ட வகையில் இல்லாமல் ஒப்படைத்தல் | ரூ. 1000 |
| 17. | 5.10 | சமூகக் குப்பை ஒருங்குசேர்த்தல் தொட்டிக்கு வெளியே அல்லது ஒதுக்கப்படாத பகுதியில் குப்பைக்கொட்டுதல் | ரூ. 1000 |
| 18. | 5.11 | கழிவை எரித்தல் | |
| | | அ) தனியாள் தன வளாகத்திற்கு உள் | ரூ. 200 |
| | | ஆ) தனியாள் பொது இடத்தில் | ரூ. 500 |
| | | இ) நிறுவனங்கள், வணிக நிறுவனம் | ரூ. 1000 |
| 19. | 7.2 | மீன், வளர்ப்புப் பறவை, இறைச்சி ஆகியவற்றின் கழிவை (வீட்டில் உருவானது அல்லாதது) குறிப்பிட்டவகையில் பிரித்து ஒருங்குசேர்த்தல் செய்யாமல் ஒப்படைத்தல் | ரூ. 5000 |
| 20. | 7.3 | அ) கொள்கலம் / குப்பைக்கூடை இல்லாத விற்பனையாளர்க்கு / கூவி விற்பவர்க்கு | ரூ. 500 |
| | | ஆ) குறிப்பிட்ட வகையில் கழிவைப் பிரிக்காமல் ஒப்படைக்கும் விற்பனையாளர்க்கு / கூவி விற்பவர்க்கு | ரூ. 1000 |
| 21. | 7.4 | வீட்டு சலதாயைத் தூய்மையாக வைக்காததற்கு | ரூ. 1000 |
| 22. | 7.5 | விருப்ப / சொந்த விலங்குக் கழிவு உருவாக்குவதற்காக | ரூ. 100 |
| 23. | 7.6 | பொதுக்கூட்டம் / நிகழ்ச்சிக்குப்பின் தூய்மை வைப்புத் தொகை 24 மணி நேரத்திற்குள் பறிமுதல் ஆவதுடன் அபராதம் தூய்மை படுத்தாமலிருப்பதற்கு | ரூ. 25000 |
| 24. | 7.8 | பெருக்கும்போது சாலையில் சீருந்து / வாகனம் நிறுத்துபதனால் ஏற்படும் தூய்மையற்ற சூழலுக்காக | ரூ. 500 நாளொன்றுக்கு |

அட்டவணை– II

மக்கும் கழிவுகள் மற்றும் மறுசுழற்சி கழிவுகள் விளக்க பட்டியல்

**உயிரிமக்கும் கழிவு**

மக்கும் கழிவு என்பதன் பொருள் பொதுவாக MSW குப்பையில் காணப்படும் கழிவாகும். இது ஈரக் கழிவு எனவும் அழைக்கப்படுகின்றது. மக்கும் கழிவு முழுமையாகத் தாவரம் அல்லது விலங்கு மூலங்களிலிருந்து உருவாகும் ஒரு வகைக் கழிவு ஆகும்.

டீ இலைகள், முட்டை ஓடுகள், பழம், காயகறித் தோல்கள் மற்றும் பயன்படாதன என விடுபவை உள்ளிட்ட கமையலறைக் கழிவுகள்

இறைச்சி மற்றும் எலும்புகள்
மலர்கள் உட்பட தோட்டக்குப்பை மற்றும் இலைக் குப்பை
விலங்குக் குப்பை
பழுதடைந்த காகிதம்
தேங்காய் ஓடு
சாம்பல்

**மறுசுழற்சி செய்யத்தக்க கழிவு**

மறுசுழற்சி செய்யத்தக்க கழிவு என்பது பொதுவாக MSW குப்பையில் காணப்படுவதாகும். இது உலர் கழிவு எனவும் அழைக்கப்படுகின்றது. இதை ஒரு செயல்முறையில் புதிய பொருள்கள் உருவாக்குவதற்கு வேண்டிய மூலப் பொருள்களாக மாற்ற முடியும். புதிய அப்பொருள்கள் அசல் பொருள்கள் போல இருக்கலாம். அவ்வாறு இல்லாமலும் இருக்கலாம்.

செய்தித்தாள்கள்

தாள், புத்தகம் இதழ்கள்

கண்ணாடி
உலோகப் பொருள்கள், கம்பி
நெகிழி (plastic)
கந்தல் துணி
தோல்
ரெக்சின் (rexine)
தொய்வை (rubber)
மரம் / அறைகலன்
மூட்டை கட்டல்

அட்டவணை– III

வீட்டு அபாயகரமான கழிவுப் பட்டியல்

ஏரோசல் டப்பா (aerosol cans)

மின்வெட்டொளி விளக்கின் மின்கலப்பெட்டியும் பட்டன் செல்லும்

நிறம்நீக்கி மற்றும் வீட்டு சமையலறையும் வடிகாலையும் தூய்மை செய்யும் பொருள்கள், இவற்றின் கொள்கலன்கள்

சீருந்து மின்கலப்பெட்டிகள், எண்ணெய் வடிகட்டிகள் மற்றும் சீருந்து பராமரிப்பு பொருள்கள் மற்றும் நுகர்பொருள்கள் வேதிய பொருள்கள் மற்றும் கரைப்பான்கள் இவற்றின் கொள்கலன்கள்

ஒப்பனை பொருள்கள் இரசாயன அடிப்படையிலான பூச்சிக்கொல்லிகள் மற்றும் இவற்றின் கொள்கலன்கள்
ஒளி விளக்குகள், குழாய் விளக்குகள், மற்றும் அடர்த்தியான ஒளிர் விளக்குகளை (CFL) வேண்டாம் என்று விலக்கிய மருந்துகள் மற்றும் இவற்றின் கொள்கலன்கள்

வண்ணப்பூச்சு, எண்ணெய்கள், உயவுப் பொருள்கள் (lubricants), வஜ்ரபசைகள் (glues), நீர்மமாக்கிகள் (thinners) மற்றும் இவற்றின் கொள்கலன்கள்

பூச்சிக்கொல்லிகள் மற்றும் களைக்கொல்லிகள் அவற்றின் வெற்று கொள்கலன்கள் புகைப்பட ஆடியோ/ வீடியோ நாடாக்கள் (tapers) மற்றும் இவற்றின் கொள்கலன்கள், இரசாயனப் பொருள்கள் மெத்து (Styrofoam) மற்றும அறைகலன்களைச் சிப்பம் கட்டும் மென்மையான மெத்துகள் மற்றும் மூட்டைகட்டும் கருவிகள் வெப்பமானிகள் மற்றும் பாதரசம் கொண்ட பொருள்கள் தனியாள் கணினிகள், தொலைபேசிகள், எம்பி3 இயக்கிகள், ஆடியோ சாதனங்கள், தொலைக்காட்சிப் பெட்டிகள், கணிப்புப் பொறி, ஜிபிஎஸ் (GPS) தானியங்கி மின்னணு, டிஜிட்டல் படப்பெட்டிகள், தானாக ஒலியை இயக்கும் கருவிகளும் மற்றும், டிவிடி (DVD)கள், வி.சி.ஆர் (VCR)கள் அல்லது கேம்கோடா போன்ற வீடியோ ஊடகத்தைப் பயன்படுத்தி ஒலி இயக்கும் கருவிகள் மற்றும் பதிப்பான்கள் முதலிய மின் கழிவுகள்

அட்டவணை– IV

உயிர் மருத்துவக் கழிவுப் பட்டியல்

(உயிர் மருத்துவக் கழிவு (M & H), விதிகள், 1998–ன் சுருக்கம்)

ஊயிரி மருத்துவக் கழிவு என்பது மனிதர் அல்லது விலங்கு நோய் ஆய்வு, மருத்துவம் அல்லது நோய்த்தடுப்பு, இவை தொடர்பான ஆராய்ச்சி நடவடிக்கைகள் ஆகியவற்றின்போது உருவாகும் கழிவுகள் அல்லது மருந்து உருவாக்கப்படும்போது அல்லது உயிரியல் ஆய்வின்போது உருவாகும் கழிவுகள் ஆகும்.

வகை எண் 4. கூர்மையான கழிவுகள் (துளை மற்றும் வெட்டுக்கள் ஏற்படுத்தும் ஊசிகள், சிரிஞ்சுகள், ஸ்கால்பெல்கள், கத்திகள், கண்ணாடிகள் முதலியன இதில் பயன்படுத்தப்பட்ட மற்றும் பயன்படுத்தப்படாத கூர்மையான கழிவுகள் அடங்கும்)

வகை எண் 5. நிராகரிக்கப்பட்ட மருந்துகள் மற்றும் வைடோடாக்சிக் (cytotoxic) மருந்துகள் (காலாவதியான, மாசடைந்த மற்றும் அப்புறப்படுத்தப்பட்ட மருந்துகள் உள்ளடக்கிய கழிவு)

வகை எண் 6. திடக்கழிவு (இரத்தம் உடல் திரவங்கள் ஆகியவற்றால் அழுக்கடைந்த பஞ்சு, கட்டுத்துணி, பிளாஸ்டர், கயிறுகள், படுக்கைகள், இரத்தம்பட்டு மாசடைந்த பிற பொருள்கள்)

வகை எண் 7. திடக்கழிவு (குழாய், வடிகுழாய், நரம்பு ஊடாகச் செலுத்தும் தொகுப்பு போன்ற கூர்மையான கழிவு அல்லாத ஒருமுறை பயன்படுத்தியபின் எறிந்துவிடும் பொருள்களால் உருவாகும் கழிவுகள்)

அட்டவணை– V

SWM பயனர் கட்டண அட்டவணை

வீடு, கடை, உணவு விடுதி, அலுவலகக் கட்டடம், விற்பணை வளாகம் ஆகியனவற்றின் உரிமையாளர்கள் கீழ்க்கண்டவாறு நிர்ணயிக்கப்பட்டுள்ள திடக்கழிவு மேலாண்மை பயன்படுத்துவோர் கட்டணம் செலுத்தவேண்டும். பரிந்துரைக்கப்பட்டுள்ள மாதாந்திர பயன்படுத்துவோர் கட்டணத்தச் சொத்துவரியுடன் பணம் செலுத்தும் இடத்தில் செலுத்தலாம்.

| | | | |
|---|---|---|---|
| அ) | ரூ. 500 க்கும் குறைவாகச் சொத்துவரி மதிப்பீடு செய்யப்பட்டுள்ள வீடு | - | வீடு ஒன்றுக்கு ரூ. 10 |
| ஆ) | ரூ. 501 லிருந்து ரூ. 1000 வரை சொத்துவரி மதிப்பீடு செய்யப்பட்டுள்ள வீடு | - | வீடு ஒன்றுக்கு ரூ. 20 |
| இ) | ரூ. 1000 க்கு மேல் சொத்துவரி மதிப்பீடு செய்யப்பட்டுள்ள வீடு | - | வீடு ஒன்றுக்கு ரூ. 30 |
| ஈ) | ரூ. 1000 க்கு மேல் ரூ. 5000 வரை சொத்துவரி மதிப்பீடு செய்யப்பட்டுள்ள வீடு | - | வீடு ஒன்றுக்கு ரூ. 50 |
| உ) கழிவு உருவாக்கும் கடை மற்றும் நிறுவனங்கள் கீழ்க்குறிப்பிட்டுள்ள பயன்படுத்துவோர் கட்டணத்தைச் செலுத்த இசைவு தெரிவிக்கும் விண்ணப்பமான இணைக்கப்பட்டுள்ள படிவம்–ஆ வுடன் கழிவைப் பிரித்து நகராட்சியிடம் ஒப்படைக்க வேண்டும்.<br>1) கடை மற்றும் நிறுவனங்கள் பயனர் கட்டணத்தை ஒரு கடை / நிறுவனம் நாள் ஒன்றுக்கு ரூ. 2 என்னும் அடிப்படையில் கணக்கிட்டு பரிந்துரைக்கப்பட்ட படிவம் – அ உடன் செலுத்த வேண்டும்.<br>2) 3 மெட்ரிக் டன் கழிவு வரை உருவாக்கும் ஹோட்டல் / திருமண மண்டபங்கள் / வளாகங்கள / வணிக நிறுவனங்கள் லகுரக வாகனங்கள் மூலம் ஒருமுறை கொண்டு செல்வதற்கு ரூ. 750/– பயனர் கட்டணத்தையும் 3 டன்னுக்கு மேல் கழிவு உருவாக்குபவர் கனரகவானகங்கள் மூலம் ஒருமுறைகொண்டு செல்வதற்கு ரூ. 1500/– பயனர் கட்டணத்தையும் மாதாந்திர அடிப்படையில் கணக்கிட்டு இதனுடன் இணைக்கப்பட்டுள்ள படிவம் –அ உடன் செலுத்த வேண்டும்.<br>3) மேற்கண்ட விலையிலிருந்து 15 % ஒவ்வொரு வருடத்திற்கும் உயர்வு அளித்து பரிந்துரைக்கப்படுகிறது. | | | |

**<u>படிவம்– அ</u>**

**<u>திடக்கழிவு சேவைக் கட்டணம் செலுத்துவதற்கான விண்ணப்பம்</u>**

அனுப்புநர்

--------------------------

--------------------------

--------------------------

பெறுநர்

மாநகராட்சி ஆணையர்,

கோயம்புத்தூர் மாநகராட்சி,

கோயம்புத்தூர் – 641 001.

ஐயா,

மேல் குறிப்பிட்டுள்ள கட்டிடத்தில் ------------------------------------------------ தொழில் செய்து வருபவராகிய நான் / நாங்கள் எனது / எங்களது கடை / உணவகம் / ---------------- ------------------------------------------------ உபயோகத்தினால் ஏற்படும் திடக்கழிவுகளை பிரித்து மாநகராட்சி வசம் ஒப்படைக்க சம்மதிக்கிறேன் என்றும் திடக்கழிவு மேலாண்மை துணை விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள சேவைக் கட்டணமான ரூ. --------------------- (ரூபாய். -------------------------------------------------------) செலுத்த இதன்மூலம் சம்மதிக்கிறேன்.

நான் / நாங்கள் எனது / எங்களது நிறுவனத்தினை மேற்படி விலாசத்திலிருந்து மாற்றும் பட்சத்தில் எழுத்து வாயிலாக மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு 30 நாட்கள் முன்னதாக அறிவிப்பு ஒன்றின் மூலம் தெரிவித்து மேற்படி விலாசத்தில் செலுத்தி வந்த திடக்கழிவு அப்புறவு படுத்துவதற்கான சேவை கட்டணத்தை ரத்து செய்ய நடவடிக்கை மேற்கொள்ள முறையாக தெரிவிப்பேன் என ஒப்புக் கொள்கிறேன்.

இப்படிக்கு

விண்ணப்பதாரர்